மலர்-1 இதழ்-9 ஜனவரி 1-15 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

## மெயில் புக்

உலக வரலாற்றில் முதன்முறையாக இமெயிலில் வெளிவரும் புத்தகம்

காயத்திரி மந்திரத்தின் பலன்கள்



## மும்மூர்த்திகள் வணங்கும் பகளாமுகி தேவி

# மும்மூர்த்திகளும், முப்பெரும் தேவிகளும் கோடானுகோடி தேவர்களும் போற்றி வணங்கும்

**நான்கு வேதங்கள் கூட எட்ட முடியாத நாயகியான ஸ்ரீ பகளாமுகி தேவியை பிரம்மா, விஷ்ணு, சிவன் வணங்கி ஆராதிக்கின்றனர் பகளாமுகி யாகத்தைவிடச் சிறந்த சக்தி வாய்ந்த மற்றொரு யாகமோ, பூஜையோ கிடையாது**

# ஸ்ரீ பகளாமுகி தேவி

இந்து மதத்தில் எண்ணற்ற தெய்வங்கள் எண்ணற்ற காரண காரியங்களுக்காக வணங்கப்பட்டு வரும் வேளையில் நாம் வணங்கும் அத்தனை தெய்வங்களும் ஏதோ ஒரு சக்தியை வேண்டி தவமிருப்பதாகவே அமைக்கப்பட்டிருக்கும், உதாரணத்திற்கு சிவபெருமான் எந்நேரத்திலும் தவக் கோலத்தில் இருப்பார், மாகவிஷ்ணு, பிரம்மா, போன்ற மும்மூர்த்திகளும் ஏதோ ஒரு சக்தியை ஆராதித்திருப்பதாக அனேக கோவில்களில் சுதை சிற்பங்களும், கற்சிற்பங்களும் வடிவமைத்திருப்பார்கள் நம் முன்னோர்.

கடவுளே வணங்கும் நிலையில் உள்ள சக்தி எது என்பது ஒரு சில நேரங்களில் புரியாமல் நாம் தவித்திருப்போம். இவற்றிற்கெல்லாம் விடை தருகிறார், பீடாதிபதி ராஜகுரு பிரம்ம ஸ்ரீ குருவாயூர் ஸ்ரீஸ்ரீசூர்யன் நம்பூதிரி ஸ்வாமிகள். இவர் ஜோதிடம், பிரசன்னம், வாஸ்து, தாந்திரீக பூஜைகள் மற்றும் வேதங்கள் போன்றவற்றை சென்னை, கோயம்புத்தூர், திருச்சி, பெங்களூரு, ஐதராபாத், புதுதில்லி, மும்பை போன்ற இடங்களில் வெகு சிறப்பாக செய்து வருகிறார். ஸ்ரீ பகளாமுகி தேவியைப் பற்றி அவர் குறிப்பிடுவதை காண்போம்.

ஸ்ரீ பரமேஸ்வரர் அருளிய வேதங்கள் தான் பாரதம் உலகிற்கு வழங்கிய பெருங்கொடையாகும். ஸ்ரீ பரமேஸ்வரர் உபாசிக்கும் ஸ்ரீ பகளாமுகி தேவிக்கு இந்தியாவிலேயே ஒரு கோயில் மட்டுமே உள்ளது அக்கோவில் இமாச்சலப்பிரதேசத்தில் கட்டப்பட்டுள்ளது. பராசக்தியினுடைய பிரத்யட்க்ஷ வடிவமான ஸ்ரீ பகளாமுகி தேவியைக் கைலாசநாதனாகிய ஸ்ரீ மகாதேவன் இடைவிடாமல் உபாசிக்கிறார்.

தேவி பராசக்தி, பஞ்சபூதங்களான அக்னி, வாயு, ஜலம், ஆகாயம் பூமியைப் படைத்தாள். மேலும் கிரகங்கள், எண்ணிலடங்காத ஜீவராசிகள், செடி, கொடிகள், மரங்கள், சொர்க்கம், நரகங்களை உள்ளடக்கிய பதினான்கு லோகங்கள், தேவர்கள், அசுரர்கள் ஆகியவற்றையும் படைத்தாள்.

சத்வ, ராஜஸ மற்றும் தாமஸ என்ற மூன்று குணங்களும் ஒன்று சேர்ந்த ஸ்ரீ பராசக்தியாகிய தேவி உலகம் என்றென்றும் நிலைத்திருக்கும் பொருட்டு சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹரம் (படைத்தல், காத்தல், அழித்தல்) என்ற சுழலும் சக்கரத்தைப் படைத்து அந்தச் சுழற்சியில், தான் படைத்த அனைத்தையும் இணைத்தாள்.

இந்தச் சுழற்சி தொடர்ந்து நடைபெறுவதற்காக மும்மூர்த்திகளான ப்ரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மூவரையும் முறையே சத்வ, ராஜஸ, தாமஸ குணங்களுடன் பராசக்தியாகிய தேவி படைத்தாள், சிருஷ்டி, ஸ்திரி, சம்ஹாரம் தொடர்ந்து நடைபெற அவர்களுக்கு துணையாக சரஸ்வதி, லட்சுமி, பார்வதிதேவி போன்றவர்களையும் பராசக்தி படைத்தாள்.

மாபெரும் தெய்வங்களான மும்மூர்த்திகளையும், அனைத்து உலகங்களையும் படைத்துப் பாதுகாக்கும் ஆதிபராசக்தி, தருணங்களுக்கு ஏற்றவாறு வேறுபட்ட கால கட்டங்களிலும், வேறுபட்ட நிலைகளிலும் பத்து விதமான வடிவங்களில் இந்திரன் முதலான தேவர்களுக்கும் மற்றும் மும்மூர்த்திகளுக்கும் தரிசனம் தந்தருள்கின்றாள். இந்தப் பத்து சொரூபங்களின் வெளிப்பாடே "தச மஹா வித்யா" என்று கூறப்படுகிறது.

மாதங்கி, புவனேஸ்வரி, பகளாமுகி, திரி புரசுந்தரி, தாரா, மாகாளி, மஹாலட்சுமி, சின்னமஸ்தா, தூமாவதி, பைரவி என்ற பத்து விதமான சொருபங்களில் தேவி பராசக்தி தரிசனம் தந்திருக்கின்றாள். மாதங்கி மந்திரத்தால் ப்ரம்மதேவனும், தாரா மந்திரத்தால் விஷ்ணுதேவனும், பகளாமுகி மந்திரத்தால் மஹாதேவனும் தேவிபராசக்தியை உபாசிக்கின்றனர்.

தமோ குண சொருபனான மஹாதேவன் ஆராதிக்கும் ஸ்ரீபகளாமுகி தேவிதான் தச மஹா வித்யாவிலேயே மிக மிகச் சிறந்த சக்தி வாய்ந்த தேவி சொரூபமாகும், தனக்குள் சரிசமமாக இணைந்திருக்கும் சத்வ, ராஜஸ, தாமஸ குணங்களின் காரணமாக, சர்வ வல்லமை படைத்த சக்தியாக ஸ்ரீபகளாமுகி தேவி உருவங்கொண்டிருக்கின்றாள். ஸ்ரீபகளாமுகிதேவியின் மந்திரத்தை ஜபம் செய்து வழிப்பட்டால் தெய்வங்களைக்கூட ஸ்தம்பிக்கச் செய்ய இயலும், இதன் காரணமாகவே கடவுளர் அனைவரும் நான்கு வேதங்கள் கூட எட்ட முடியாத நாயகியான ஸ்ரீ பகளாமுகி தேவியை வணங்கி ஆராதிக்கின்றனர். எதிரிகள் செய்யும் வம்பு வழக்குகளை முறியடித்து நிரந்தரத் தீர்வு காண்பதற்குப் பகளாமுகி யாகத்தைவிடச் சிறந்த சக்தி வாய்ந்த மற்றொரு யாகமோ, பூஜையோ கிடையாது.

தேவியின் மூன்று குணங்களில் ஒன்றான ராஜஸ குணம், மேலே குறிப்பிட்ட (சத்ரு சம்ஹார) வரத்தை வழங்கும், தேவியின் சத்வ குணம், மங்களஸித்தி (திருமால்), சந்தானஸித்தி (குழந்தை பாக்கியம், சௌக்ய தாம்பத்ய வரதானம் (மகிழ்ச்சி நிறைந்த மண வாழ்க்கை), தன பாக்கியஸித்தி (செல்வம்) மற்றும் ஆரோக்கிய ஸித்தி ஆகிய வற்றைத் தந்திடும். தேவியின் தாமஸ குணம் முற்பிறவியின் காரணமாக வந்துவிட்ட மஹா ரோகங்கள், கெட்ட ஆவிகள், வறுமை, கடன் தொல்லை, கிரஹக் கோளாறுகளை முறியடித்து சௌபாக்கியங்களையும், சந்தோஷத்தையும் வாரி வழங்கும்.

தேவி பராசக்தியின் தசமஹாவித்யா என்று அறியப்படும் பத்து விதமான சொரூபங்களில் மாதங்கி, புவனேஸ்வரி, திரிபுரசுந்தரி, மஹாலெட்சுமி என்ற இந்த நான்கு சொரூபங்களும் சத்வ குணத்தைச் சார்ந்த சொருபங்களாகும், மாகாளி, தாரா, பைரவி, சின்னமஸ்தா இவர்கள் ராஜஸ குணம் சார்ந்தவர்கள், தூமாவதி தாமஸ குணம் சார்ந்த சொரூபங்களும்.

ஆனால், ஸ்ரீ பகளாமுகி தேவி மட்டும்தான் சத்வ, ராஜஸ, தாமஸ என்ற மூன்று குணங்களையும் ஒருங்கே அமையப்பெற்றவள், இதன் காரணமாகவே சர்வ வல்லமை படைத்த


ஆன்மிகமலர் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்! .காம்

பகளாமுகி தேவி திடீரென்று கோபமடையக் கூடும், அதுபோலவே மகிழ்ச்சி அடையவும் கூடும்.

ஸ்ரீ பகளாமுகி தேவி மஞ்சளாடை தரித்து, சர்வ ஆபரணங்கள் அணிந்து, நறுமணம் கமழும் செண்பக மலர்மாலை சூடி, புன்சிரிப்போடு வரதான முத்திரையுடன் தங்கச் சிம்மாசனத்தில் வீற்றிருப்பது தேவியின் சத்வ குணத்தை வெளிப்படுத்தும்.

தேவியின் கைகளில் ஏந்தியுள்ள முத்கரம், பாசம், வஜ்ராயுதம் ஆகிய பயங்கரமான ஆயுதங் கள் தேவியினுடைய ராஜஸ குணத்தை வெளிப்படுத்துகின்றன. தீய பகைவனின் நாவை இழுத்துத் துண்டித்து அதனை தன் கையில் ஏந்தியிருப்பது தாமஸ குணத்தைவெளிப்படுத்துவதாகும்.

அமாவாசை அன்று செய்யப்படும் பகளாமுகி சத்ரு சம்ஹார யாகம் முழுப்பயனையும் தரும். பில்லி, சூன்யம் போன்றவற்றால் விளையும் தீய விளைவுகளை நொடிப்பொழுதில் அகற்றும், பகைவர்களையும் அவர்கள் ஏற்படுத்திய சிக்கல்களையும் புற முதுகிட்டு ஓட வைக்கும் வீண் வழக்குகளிலிருந்து விடுதலையைப் பெற்றுத் தரும்.

அதேபோன்று சுக்லாஷ்டமி அன்று செய்யப்படும் பகளாமுகி நவாக்ஷரி மந்திர யாகத்தில் செய்யப்படும் சர்வரோகசமண மந்திர ஹோமம் மற்றும் ம்ருத சஞ்சீவனி மந்திர ஹோமம் மூதாதையரின் சாபங்களாலும் முற்பிறவியில் செய்த பாவங்களாலும் ராகு தோஷத்தாலும் ஏற்படும் கொடிய நோய்களை விரட்டியடிக்கும் சக்தி படைத்ததாகும்.

பௌர்ணமி நாளன்று இரவு நேரத்தில் செய்யப்படும் பகளாமுகி மஹாமந்திர யாகத்தில் பாக்ய சூக்தம், மங்கள சூக்தம், தேவி சூக்தம், ஸ்ரீ சூக்தம் முதலான வேத மந்திரங்களால் 'பரமான்னம்' ஹோமம் செய்வது திருமண தோஷங்களை அகற்றி சுபமங்களஸித்தி (திரு மணம்), சந்தானஸித்தி (குழந்தை பாக்கியம்), சிறந்த மணவாழ்க்கை, தனபாக்கியஸித்தி, ஆரோக்கியம், மேற்படிப்பு, நல்லவேலை, பதவி உயர்வு முதலியவற்றை தரும் சக்தி படைத்தது.

இவ்வளவு சக்திகளையும் ஒருங்கே பெற்ற ஸ்ரீபகளாமுகி தேவியின் திருத்தலம் இந்தியாவில் இமாச்சலப்பிரதேசத்தில் மட்டுமே அமைந்துள்ளது. தற்போது இத்திருக் கோவில் தென் இந்தியாவில், தமிழ் நாட்டில் உள்ள திருநெல்வேலி மாவட்டம் கல்லிடைக்குறிச்சி தெற்கு பாப்பான்குளம் கிராமத்தில் கோவில் கட்டப்பட்டுள்ளது.

மேலும் பல்வேறு யாக, பூஜை, தாந்திரிக பூஜைகளும் இத் திருக் கோவிலில் நடைபெற்று வருகிறது இத்திருக்கோயில் பற்றி அடுத்த இதழில் விரிவாக பார்ப்போம்.

தொகுப்பு: ச.நாகராஜன்,
மேலும் விபரங்களுக்கு
7305442299









# பகவத் கீதையின் எட்டு அறிவுரைகள்

1. ஒருவருக்கொருவர் உதவி செய்ய வேண்டும்
2. எல்லா செயல்களிலும் மிதமான போக்கை கடைப்பிடிக்க வேண்டும்
3. எல்லா உயிர்களும் சமம் என்பதை உணர வேண்டும்
4. எல்லாருக்கும் இறைவனே தந்தை, இயற்கையே அன்னை, உலகமே ஒரு குடும்பம் என்பதை உணர வேண்டும்
5. உன்னுடைய செயல்கள் தான் உனக்கு சொந்தமானது என்பதை உணர வேண்டும்
6. மனதை கட்டுப்படுத்த பழகிக் கொள்ள வேண்டும்
7. ஆன்மிக அறிவை அனைவரும் வளர்த்துக் கொள்ள வேண்டும்
8. ஒருவரின் வெளித்தோற்றத்தை வைத்து அவரை எடை போடக் கூடாது



உலக வரலாற்றிலேயே முதல்முறையாக ஐம்பொன்னால் உருவாக்கும்

# ஸ்ரீ பகளாமுகி
# சர்வரட்ஷாகவச மஹா யந்திரம் - யாகம்

(ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை மட்டும்)

**30 லட்சம் உரு மந்திர ஜபமும்**
**3 லட்சம் உரு மந்திர ஹோமமும்**

(ஜபம், ஹோமம் 8 மாதங்கள் தேவியின் சன்னதியில்)




சர்வரட்ஷாகவச மஹா யந்திரம்

**ஜபம், ஹோமம் தொடங்கும் நாள் : 03.05.2017 (ஸ்ரீ பகளாமுகி ஜெயந்தி திருநாள் முதல்)**

**தொடர்புக்கு : 7305 44 22 99**

ஜபஹோமங்கள் நேரடியாக இணையதளம் மூலம் பார்க்கலாம் : www.bagalamukhitv.com

மேலும் விபரங்களுக்கு : www.sreebagalamukhidevitemple.com | Mobile App : bagalamukhitv

# யுகங்கள் நான்கை குறிக்கும் ஸ்வஸ்திக்



இதுவரை ஸ்வஸ்திக் சின்னம் என்றால் ஒரு லாபகரமான, வெற்றியடைய வைக்கும் ஒரு நம்பிக்கைக்குரிய சின்னம் என்றுதான் நாம் அறிந்திருக்கிறோம் ஆனால் அந்த ஸ்வஸ்திக் சின்னத்திற்குள் அகில அண்டங்களும் அடங்கியுள்ளது என்பதை பெரும்பாலும் நாம் அறியாமல் இருக்கிறோம்.

இந்த ஸ்வஸ்திக்கினுடைய பாகங்கள் 4 ஒன்றுக் கொன்று சரி சமமாக 4 பிரிவுகளாக உள்ளது.. இந்த 4ம் நான்கு யுகங்களை குறிக்கும். நான்கு யுகங்களும் சரி சமமான பாகங்கள். ஒவ்வொரு யுகமும் 1250 வருடங்கள். நான்கு யுகங்களும் சேர்ந்து 5000ம் வருடங்கள். இந்த 5000ம் வருடங்களில் 2500 வருடங்கள் சுவர்க்கம். பிற்பகுதி 2500 வருடங்கள் உலகம் மெல்ல... மெல்ல.. கீழிறங்கி வருகின்றது. இந்த நான்கு யுகங்கள் முறையே சத்யுகம், த்ரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என்றழைக்கப்பட்டு..ஒவ்வொரு 5000ம் வருடங்களும் திரும்பத் திரும்ப இந்த பிறவி சக்கரம் இப்படியே சுற்றிவருகின்றது. இதில்தான் மனிதசரித்திரம் அரங்கேறுகின்றது அதாவது நாம் இப்பொழுது கலியுகத்தின் இறுதியில் இருக்கின்றோம். இந்த நேரத்தில் தான் அனைவரும். அனைத்து தர்மத்தினரும் இறைவனை நோக்கி கூப்பிட ஆரம்பிக்கின்றனர்.

ஏனென்றால் கலியுகத்தின் இன்னொரு பெயர் முழு கொடூரமான நரகம், அப்படியானால், மனிதனிடம் தீய செயல்கள் அதிகரித்து, நன்மையும், புண்ணியகாரியங்களும் குறைந்து பாவத்தின் மீது மனிதனுக்கு நாட்டம் அதிகரித்து செல்லும் யுகம் கலியுகம். இந்த கலியுகத்தில் அனைத்து தர்மமும் கீழான நிலை அடைந்து அதர்மத்தின் வசமாகின்றது.

இவ்வளவு அற்புதமான ஒரு கால நிலையை ஸ்வஸ்திக் குறியீட்டில் அடங்கியிருக்கிறது.





ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!



சந்தன மரம் மருத்துவப்பயன் நிறைந்த ஒரு மரம். சந்தனக்கட்டையை சந்தனக் கல்லில் தேய்த்து சாந்தாக்கி, உடம்பில் பூசிக்கொள்வதன் மூலம் கோடை வெப்பத்திலிருந்து தங்களை காத்துக்கொள்கிறார்கள் இந்தியர்கள். சந்தன மரம், வாசனை நிறைந்தது. மரத்தின் வைரம் பாய்ந்த கட்டைப் பகுதி எண்ணெய்ச்சத்து நிறைந்தது. இதிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய் மருத்துவத்தன்மை நிறைந்ததும், சருமத்துக்கு குளிர்ச்சி தரக்கூடியதுமாகும்.

நம் உடலின் அனைத்து நாடி நரம்புகளும் மூளையுடன் இணைக்கப்பட்டுள்ளன. உடலின் பெரும்பாலான நரம்புகள் நெற்றிப்பொட்டின் வழியாகவே செல்கின்றன. ஆகவே நெற்றிப்பகுதி அதிக உஷ்ணமாகவே இருக்கும்.

# குளிர்ச்சியை தரும் சந்தனம் குங்குமம்



நம் அடிவயிற்றில் நெருப்பு சக்தி இருக்கிறது. ஆனால் அந்தச்சூட்டின் தாக்கம் அதிகமாக உணரப்படுவது நெற்றிப் பொட்டில்தான். அங்கு பூசப்படும் சந்தனம் நமது மூளையையும், அதை இணைக்கும் நரம்புகளையும் குளிரச் செய்கிறது. நெற்றிப்பகுதியிலுள்ள frontal cortex என்னும் இடத்தில் அணியப்படும் சந்தனமானது, வெப்பம் மிகுதியால் ஏற்படும் மூளைச்சோர்வை நீக்குகிறது.

பெண்கள் நெற்றியில் பொட்டு வைத்துக்கொள்ள பயன்படுத்தும் ஒரு பொடி குங்குமம். இயற்கை முறையில் விரலி மஞ்சள், வெண்காரம், படிகாரம், கஸ்தூரி மஞ்சள் ஆகியவற்றைச் சேர்த்து அரைக்கப்பட்ட பொடியுடன் நல்லெண்ணெய் சேர்த்தால் குங்குமம் தயார். மஞ்சளும், காரமும் வேதிவினை புரிவதால் சிவப்பு நிறம் கிடைக்கிறது. அம்மன் கோவில்களில் பிரசாதமாக குங்குமம் தரப்படுகிறது. மனித உடலில் தெய்வ சக்தி வாய்ந்தது நெற்றிக்கண். அதாவது, இரண்டு புருவங்களுக்கு நடுவிலுள்ள பகுதி. இங்கு குங்குமத்தை இட்டால் அமைதி கிடைக்கும்.

நம் கபாலத்தில் உள்ள சிந்தனை நரம்புகளின் முடிச்சு இரு புருவங்களுக்கு இடையே உள்ளது. மனிதன் அதிகமாக சிந்திக்கும்போது சிந்தனை நரம்புகள் சூடேறி நெற்றி வலி, தலைபாரம், தலைச்சுற்றல் ஏற்படும். மேலும் மன உளைச்சல் ஏற்பட்டு, தன் நிலை மறக்க வேண்டிய சூழ்நிலை உருவாகி பல விரும்பத் தகாத விளைவுகள் ஏற்படும். ஆகவே அந்த நரம்பு மண்டலம் குளிர்ச்சியாக இருக்க வேண்டும்.

சந்தனம், குங்குமம் போன்றவற்றுக்கு குளிர்ச்சியூட்டும் தன்மை உண்டு. எனவே அந்த நரம்பு மண்டலம் குளிர்ச்சியாக இருக்க வேண்டும் என்பதற்காக சந்தனம் பூசி, சந்தனம் காயாமல் இருக்க குங்குமம் இடுகிறோம். இதனால் புத்துணர்வும், புதுத்தெளிவும், புதிய சிந்தனைகளும், உற்சாகமும் தோன்றும். உணர்ச்சியற்ற நரம்புகள் தூண்டப்படுகின்றன.

மனிதனின் உடற்கூறுக்கு உகந்த முறைகளைத்தான் நாம் இறைவழிபாடுகள் மூலம் அடைகிறோம்.

ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!



# அமாவாசைதோறும் அன்னாபிஷேகம் நடைபெறும் சிவாலயம்

திருவாரூரிலிருந்து தஞ்சாவூர் செல்லும் வழியிலுள்ள விளமல் பதஞ்சலி மனோகரர் கோயிலில் மகாளய அமாவாசை தினத்தன்று, சிவனுக்கு அன்னாபிஷேகம் செய்து, பித்ரு தர்ப்பணம் செய்து வழிபடுகின்றனர். அமாவாசைதோறும் அன்னாபிஷேகம் நடக்கும் விசேஷ தலம் இது.

பொதுவாக சிவன் கோயில்களில் ஐப்பசி பவுர்ணமியன்றுதான் அன்னாபிஷேகம் செய்வர். விளமல் பதஞ்சலி மனோகரர் கோயிலில் எல்லா அமாவாசை நாட்களிலும் அன்னாபிஷேகம் செய்யப் படுகிறது. பித்ருக்களுக்கு முறையாக திதி, தர்ப்பணம் செய்யாதவர்கள் அமாவாசையன்று, திருவாரூர் கமலாலய தீர்த்தத்திலுள்ள (தெப்பக்குளம்) பிதுர் கட்டத்திலும், விளமல் கோயிலில் உள்ள அக்னி தீர்த்தத்திலும் நீராடுகின்றனர். பின், பதஞ்சலி மனோகரருக்கு அன்னாபிஷேகம் செய்து, மோட்ச தீபம் ஏற்றி வழிபடுகின்றனர்.

இதனால் முன்னோர்கள் மகிழ்ச்சியடைந்து, தலைமுறை சிறக்க ஆசிர்வதிப்பர். மகாளய அமாவாசையன்று இந்த வழிபாட்டைச் செய்வது இன்னும் சிறப்பு. விபத்தில் அகால மரணமடைந்தவர்களுக்காகவும், இறக்கும் தருவாயில் அவஸ்தைப்படுவோருக்காகவும் இங்கு மோட்ச தீபம் ஏற்றி வழிபடுகின்றனர்.

# முன்னோர்கள் கனவில் வந்தால்....

நம்மோடு நெருங்கிப் பழகியவர்கள், நமக்கு பிடித்தவர்கள், போன்றோர் இறந்தால், சில நேரங்களில் நமது கனவில் அவர்களின் உருவம் வரக்கூடும். அவ்வாறு அவர்கள் வந்தால் வீண் பயம் நம்மைத் தொற்றிக் கொள்வதும் அதுகுறித்த சிந்தனையும் அடிக்கடி தோன்றி நம்மை படாத பாடு படுத்திவிடும்.

இதுகுறித்து ஜோதிடம் என்ன கூறுகிறது என்று பார்ப்போம்.

இயற்கையாக மரணமடைந்தவர்கள் கனவில் வந்தால் நல்ல பலன்கள் கிடைக்கும் என்று கனவுகள் தொடர்பான நூல்களில் கூறப்பட்டுள்ளது. குறிப்பாக, பேரன், பேத்தி எடுத்து நன்றாக வாழ்ந்து மரணமடைந்த முன்னோர்கள் கனவில் வந்தால் அதனை ஆசி எனக் கருத வேண்டும்.

ஆனால் துர்மரணம் அடைந்தவர்கள் கனவில் வந்தால் சில இடர்பாடுகள் ஏற்படும். உடல் நலம் குறையலாம். விபத்து, குடும்பத்தில் வாக்குவாதம், பிரிவு உள்ளிட்டவை ஏற்படக் கூடும்.

இதுபோன்ற பிரச்சனைகளைத் தவிர்க்க குலதெய்வக் கோயில் வழிபாட்டை மேற்கொள்ளலாம். பொங்கல் வைத்து அன்னதானம் வழங்கலாம். வஸ்திர தானம் செய்யலாம்.

வயதானவர்கள், பெரியவர்கள், வாழ்க்கை முழுவதும் சிறப்பாக வாழ்ந்து இயற்கை எய்தியவர்கள் கனவில் வந்தால் கவலை கொள்ளத் தேவையில்லை







விளம்பரங்கள் வரவேற்கப்படுகிறது
உலகின் முதல் மெயில் புத்தகமாக வெளிவரும் நமது மாதமிருமுறை இதழுக்கு விளம்பரங்கள் வரவேற்கப்படுகிறது
முழு பக்க விளம்பரம் ரூ.5,000
அரைப்பக்க விளம்பரம் ரூ.2,500
விளம்பர ஏஜெண்ட்களுக்கு சிறப்பு சலுகைகள் வழங்கப்படும்
மேலும் விபரங்களுக்கு
8939499598 9677159070 7299992699
நிர்வாக அலுவலகம் aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024
தவறாமல் படியுங்கள்
www.aanmeegamalar.com

# மகர சங்கராந்தி

மகர சங்கராந்தி பண்டிகை, ஹிந்துகளின் மற்ற பண்டிகைகள் போல் சந்திரனின் நிலை களை சார்ந்து வராமல் சூரியனின் நிலையை சார்ந்து வருவதாகும். பூமி சூரியனை சுற்றிவர எடுத்துகொள்ளும் நாட்களில் ஏற்படும் வித்தியாசத்தை சரிசெய்ய சிலசமயம் சங்கராந்தி பண்டிகை ஒரு நாள் தள்ளி வரும். இவ்வருடத்தில் ஜனவரி 14 தேதி மகர சங்கராந்தி ஆகும். தமிழ் நாட்டில் மகரசங்கராந்தி பொங்கல் என கொண்டாடப்படுகிறது. அதேபோல் கேரளா, கர்நாடகா, ஆந்திரா, மகாராஷ்ட்ரா, வங்காளம், ஒரிசா போன்ற மாநிலங்களிலும் விமரிசையாக கொண்டாடப்படுகிறது.

## மகர சங்கராந்தியின் வரலாறு

சங்கராந்தி என்பது ஒரு தெய்வத்தை குறிக்கும். சங்கராசூர் என்னும் அசுரனை வதம் செய்தவள். மகர சங்கராந்தியை அடுத்து வரும் நாள் கின்க்ராந்த் அல்லது கரிநாள் எனப்படும். இந்நாளில், தேவியானவள் கின்கராசுரனை வதம் செய்தாள்.

## மகர சங்கராந்தியின் முக்கியத்துவம்

பூமி சூரியனை சுற்றி வரும்போது வடக்கு நோக்கி செல்ல ஆரம்பிக்கும் நாள் மகர சங்கராந்தி எனப்படுகிறது. கர்க சங்கராந்தியிலிருந்து(கடக ராசியில் சூரியன் சஞ்சரிக்கும் காலம்) மகர சங்கராந்தி வரையிலான காலத்தை தக்ஷிணாயனம் எனப்படும். ஹிந்து சாஸ்திரப்படி உத்தராயண காலத்தில் இறக்கும் நபர்களை விட தக்ஷிணாயன காலத்தில் இறக்கும் நபர்கள் யமலோகத்தை சென்றடையும் வாய்ப்பு அதிகமாக உள்ளது.

## ஆன்மீக கண்ணோட்டத்தில் மகர சங்கராந்தியின் முக்கியத்துவம்

மகர சங்கராந்தி நாளில், சூரிய உதயத்திலிருந்து சூரிய அஸ்தமனம் வரை சுற்று சுழலில் அதிக சைதன்யம் (தெய்வீக தத்துவம்) நிரம்பியுள்ளது. எனவே, இச்சமயத்தில்ஆன்மீக பயிற்சி மேற்கொள்வது மிகவும் பலனளிக்கும்.

## மகர சங்கராந்தியை கொண்டாடும் முறைகள்

### 1. மகர சங்கராந்தியின்போது புனித நீராடுதல் மூலம் அடையும் அதிக பட்ச நன்மையின் பலன்

மகர சங்கராந்தி நாளில், சூரிய உதயத்திலிருந்து சூரிய அஸ்தமனம் வரை முழுவதுமே சுப முகூர்த்தமாகும். இந்நாளில் புனித நீராடுதல் விசேஷமானதாகும். இந்நாளில் கங்கை, யமுனை, கோதாவரி, கிருஷ்ணா மற்றும் காவேரி நதி கரைகளில் அமைந்திருக்கும் புனித ஸ்தலங்களில் நீராடுவது அதிகபட்ச நன்மையை அளிக்கும்.

### 2. சுப முகூர்த்த நாளில் செய்யப்படும் தானத்தின் முக்கியத்துவம்

மகர சங்கராந்தியிலிருந்து ரதசப் தமி வரையிலான காலம் மிகவும் மங்களகரமானது. எனவே இத்தகைய தருணத்தில் எந்த ஒரு தானதருமங்களில் ஈடுபடுபவர்கள் அதிக பட்ச நன்மையை அடைவர்.

### 3 . மகர சங்கராந்தியின் போது தானமாக அளிக்கப்படும் பொருட்கள்

தனது நிலையை பொருத்து புதிய பாத்திரங்கள், உடைகள், உணவு, எள், எள் பானை, வெல்லம், பசு மாடு, குதிரை, தங்கம் மற்றும் நிலம் ஆகிவற்றை தானமாக அளித்தல் நன்மை பயக்கும். இந்நாளில், திருமணமான பெண்களும் சில தானங்கள் செய்வர். அவர்கள் கல்யாணம் ஆகாத பெண்களிடமிருந்து சில பொருட்களை வாங்கி கொண்டு, எள் மற்றும் வெல்லத்தை திருப்பி கொடுப்பர். திருமணமான பெண்கள், மஞ்சள் குங்கும சடங்கை (சந்தனம் மற்றும் குங்குமத்தை நெற்றிக்கு இடுதல்) ஏற்பாடு செய்து மற்ற சுமங்கலிகளுக்கு பரிசு பொருட்களையும் அளிப்பர்.

திருமணமான பெண்கள் மகர சங்கராந்தியன்று நிகழ்த்தும் மஞ்சள் குங்குமம் சடங்கின் முக்கியத்துவம்.

மஞ்சள் குங்கும சடங்கு பிரபஞ்சத்தில் செய லற்ற ஆதி சக்தியின் அதிர்வலைகளை தூண்டி விழிப்படைய செய்யும். இது சகுண தத்துவத்தின் பதிவுகளை தோற்றுவித்து அந்நபரின்



மனதில் பக்தியை அதிகபடுத்தி ஆன்மீக உணர்வை அதிகரிக்க செய்யும்.

## மஞ்சள் குங்கும சடங்கின் வழிமுறைகள்

மஞ்சள் குங்குமமிடுதல்: சுமங்கலிக்கு மஞ்சள் குங்குமம் இடுவதன் மூலம் அவளுள் செயலற்று இருக்கும் ஸ்ரீ துர்கா தேவியின் தத்துவத்தை விழிப்படைய செய்து அதை செய்பவருக்கும் நன்மை கிடைக்கிறது.

நறுமணமுள்ள திரவியம் பூசுதல்: வாசனை திரவியத்திலிருந்து வெளிப்படும் நறுமண துகள்கள் தேவியின் தத்துவத்தை திருப்தி படுத்தி அதனை பூசிவிடும் சுமங்கலிகளுக்கு வெகு சீக்கிரத்திலேயே நன்மையை வழங்கும்.

பன்னீர் தெளித்தல்: பன்னீரிலிருந்து வெளிப்படும் நறுமண துகள்கள் தேவி தத்துவத்தின் அதிர் வலைகளை செயல்படுத்தி சுற்றுச்சூழலை தூய்மையாக்கி அதனை தெளிக்கும் சுமங்கலிக்கு தேவியின் விழிப்படைந்த சகுண தத்துவத்தின் அதிகபட்ச நன்மையை அளிக்கிறது.

பரிசு அளித் தல்: பரிசு பொருள்



## மகர சங்கராந்தி அன்று பட்டம் விடும் பழக்கம்

இன்று தேசமும் தர்மமும் ஆபத்தில் இருக்கும் சமயத்தில் கேளிக்கைக்காக பட்டம் விடுவது என்பது 'ரோம் நகரம் பற்றி எரியும்போது நீரோ மன்னன் பிடில் வாசித்தது போலாகும்'. பட்டம் விடும் நேரத்தில் தேசநல பணிகளில் ஈடுபட்டால் முன்னேற்றம் ஏற்படும். அதோடு ஆன்மீக சாதனையில் தர்ம காரியங்களில் ஈடுபட்டால் தனிப்பட்ட மற்றும் சமூக முன்னேற்றம் ஆகியவை ஏற்படும்.


ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!

எப்போதும் சேலையின் தலைப்பில் (முந்தானையில்) வைத்து தரப்படும். இன்னொரு சுமங்கலிக்கு பரிசளித்தல் என்பது, அச்சுமங்கலிக்குள் இருக்கும் தெய்வீக தன்மையிடம், உடல், மனம் மற்றும் செல்வத்தை அர்ப்பணித்து சரணடைவதேயாகும். சேலையின் தலைப்பு மூலம் தருவது என்பது உடம்பின் மீது அணியப்படும் ஆடைகளுடனான பற்றுதலையும் கூட விடுத்து அதன் மூலம் உடம்பின் உணர்வினை வெல்ல கற்று கொள்வதாகும். ஆன்மீக சாதனை புரிய சங்கராந்தி காலவரையானது மிகவும் உகந்ததாக கருதப்படுவதால், இத்தருணத்தில் பரிசளித்தல் என்பது தேவியை விரைவில் மகிழ்வித்து பரிசளிப்பவரின் விருப்பம் நிறைவேற நல்லாசி வழங்கித் தருகிறது.

## எவ்வகை பரிசுகள் அளித்தல் வேண்டும்?:

தார்மீகமல்லாத பொருட்களான சோப்பு, பிளாஸ்டிக் பொருட்களை வழங்குவதை விட ஆன்மீக நிறைவு தரக்கூடிய மற்றும் திருமண வாழ்வை உணர்த்த கூடிய பொருட்களான ஊதுபத்தி, நறுமண மூலிகை தூள், புனித நூல்கள்



மற்றும் சமயம் சார்ந்த நூல்கள், தெய்வங்களின் படம், ஆன்மீக உரைகள் கொண்ட சிடி கள் போன்றவற்றை பரிசளிக்க வேண்டும்.

## சிறு மண்பானைகள்

மராத்தியில் சுகத் எனப்படும் சிறிய மண்பானைகள் சங்கராந்தி பண்டிகையின் போது முக்கியமானதாகும். அச்சிறு பானைகளுக்கு மஞ்சள் குங்குமமிட்டு பின் நூல் சுற்றி கட்டப்படும். பின் அதில் காரட், இலந்தை பழம், கரும்பு துண்டுகள், விதைகள், பஞ்சு, சுண்டல், வெல்லம் சேர்த்த எள், மஞ்சள் மற்றும் குங்குமம் முதலியவை வைக்கப்படும். இதுபோல் ஐந்து பானைகள் செய்து மர பலகை மீது வைத்து, அப்பலகையை சுற்றி கோலமிட்டு அதனை வழிபட வேண்டும். இதில் மூன்று பானைகளை சுமங்கலிகளுக்கு பரிசாக அளித்து, ஒன்றை துளசி செடிக்கு படைத்து மற்றொன்றை தானே வைத்து கொள்ளுதல் வேண்டும்.

## எள்ளின் பயன்கள்

சங்கராந்தி பண்டிகையின் போது எள்



அதிகமாக பயன் படுத்தப்படுகிறது. உதாரணமாக எள் கலந்த நீரில் குளிப்பது, எள் மற்றும் வெல்லம் கலந்த (எள்ளுருண்டை) உட்கொள்ளுதல், அதனை பிறர்க்கு பகிர்ந்தளித்தல், பிராமணர்களுக்கு பிரசாதமாக வழங்குவது, சிவாலயங்களில் எள் தீபம் ஏற்றுவது மற்றும் பித்ருகளுக்கு சிரார்த்தம் செய்ய படையலில் சேர்ப்பது போன்றவை.

## பாவத்தை அகற்றும் எள்

ஹிந்து ஆகமங்களின் படி இந்நாளில், உடம்பிற்கு நல்லெண்ணெய் தேய்த்தல், மூலிகை பொடி அல்லது சீயக்காய் தேய்த்து எள் கலந்த நீரில் குளித்தல், பின் எள் கலந்த தண்ணீரைக் குடித்தல், ஹோமம் வளர்த்தல், அதில் எள் அர்ப்பணம் செய்தல், மற்றும் இதுபோல் எள்ளை அதிகளவு பயன்படுத்துபவர்கள் பாவத்திலிருந்து விடுபடுவார்கள்.

சங்கராந்தி பண்டிகை சமயம் குளிர்காலமாக இருப்பதால், எள் அதிகளவு உபயோகித்தல் நன்மை அளிக்கும்.

## ஆன்மீகத்தில் எள்ளின் முக்கியத்துவம்

1.எள்ளிற்கு சத்துவ அலைகளை ஆகர்ஷிக் கும் சக்தியும், அதை வெளிபடுத்தும் சக்தியும், அதிகளவில் உள்ளபடியால் எள் உருண்டையை உட்கொள்வது ஆன்மீகப் பயிற்சியை மேம்படுத்தும். எள்ளுருண்டையை மற்றவர்களுக்கும் பகிர்ந்தளித்தல் சத்துவ பரிமாற்றத்திற்கு வழி வகுக்கும். 2. திவசத்தின்போது எள்ளை பயன்படுத்து வதால் கெட்ட ஆவிகள் உண்டாக்கும் தடைகள் தவிர்க்கப்படும்.

## தடை செய்யப்பட்ட செயல்கள்!

சங்கராந்தியின்போது கடுமையாக பேசுவது, மரங்களை, புற்களை வெட்டுவது, உடலிச்சையை தூண்டும் செயல்களின் ஈடுபடுவது ஆகியவை முழுவதுமாக தவிர்க்கப்பட வேண்டும்.

மேலும் தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவும்: 9380949626, http://www.vmission.org



ஒவ்வொருவரின் இமெயில் முகவரியை தேடி

# மற்றவர்களும் பயன்பெற அறிமுகப் படுத்துங்கள்....

ஆன்மீக மலர் மெயில் புத்தகத்தில் இதுவரை 7,000க்கும் மேற்பட்ட அன்பர்கள் தங்களது மெயில் முகவரியை பதிவு செய்துள்ளனர். பதிவு செய்த அனைவரின் இமெயில் முகவரிக்கு மாதம் இருமுறை நமது இதழ் இலவசமாக அனுப்பி வைக்கப்படும். இந்த சேவையைப் பற்றி அறியாத ஆன்மீக அன்பர்களும் பயன் பெற, நமது வாசகர்கள் உதவ வேண்டும். அவர்களது இ-மெயில் முகவரியையும் பதிவு செய்ய உதவுங்கள். பதிவு செய்த அன்பர்கள் மீண்டும் பதிவு செய்ய வேண்டியதில்லை.

தெரியாதவர்களுக்கு நமது சேவையை தெரியப்படுத்துங்கள்.

உங்கள் மெயில் முகவரியை பதிவு செய்ய

aanmeegamalar@gmail.com

whatsapp: 7299992699

# கர்மயோக சாஸ்திரம்

## விளக்கம் வகைகள் வழிமுறை

ஊழ்வினையை அடிப்படையாகக்கொண்டு இவ்வுலகில் பிறந்த மானிடர்கள் ஒழுக்க நெறிகொண்ட புண்ணியத்தை பெருக்குகின்ற கடமைகளைச் செய்வதன் மூலம் உயர்வு பெறலாம் என்னும் நெறியை உணர்த்துவதே கர்ம யோக சாஸ்திரமாகும்.

“கர்ம யோகம்” மட்டும் ஒரு ஆன்மாவின் வினை வலிமையை உயர்த்தவும் தாழ்த்தவும் செய்யக்கூடியதாகும்.

உடல்நிலையை வலிமைப்படுத்தி அதன் மூலம் சுவாச நிலையைக் கட்டுப்படுத்தி மூன்றாம் கண்ணாக விளங்கும் நெற்றிக்கண்ணைத் திறந்து உயர்வு பெறத்தக்க மார்க்கம் வாசி யோகம் என்பதாகும். ஆனால், வாசி யோகத்தை திறம்படப்பயின்று அதனை செயலாக்கம் செய்து வெற்றி காண்பது மிகவும் கடினமான செயலாகையால் கர்மயோக வழியில் கடமைகளின் மூலமே ஞானக்கண்ணைத் திறக்க வழிவகை செய்யும் மார்க்கமே கர்ம யோகமாகும்.

கலியுகத்தில் பலதரப்பட்ட மக்களால் மதம், மொழி போன்ற எந்தவித வித்தியாசங்களுக்கும் கட்டுப்படாமல்; அதிக சிரமங்கள் இல்லாமல் எளிமையாகப் பின்பற்றி உயர்வடையும் மார்க்கங்களை கர்ம யோக சாஸ்திரம் கூறுகின்றது. சித்தர்கள் பின்பற்றி தீவினைகளை நீக்கி நல்வினைகளைப் பெற்று நினைத்ததெல்லாம் பெற்ற சிறப்புடைய அபூர்வ யோக முறை ”சித்தர் கர்ம யோகமாகும்”.

### கர்ம யோகம்

கர்ம யோகமானது செய்தல், செய்வித்தல் என்னும் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு இரண்டு வகைகளாகப் பிரிக்கப் படுகின்றது. அவையாவன:

1. தன்பால் கர்ம யோகம்
2. பிறபால் கர்ம யோகம்

### தன்பால் கர்ம யோகம்:

தன்பால் கர்ம யோகமானது தனக்கும் தன்னைச்சார்ந்த ரத்தத் தொடர்புடைய உறவினர்களுக்கும் கடமையாற்றுவதாகும். தன்னை உயர்த்திக்கொள்ள முதலில் தன்னுடைய ஒழுக்கத்தை வளர்த்துக்கொண்டு, தர்ம நெறிகளுக்குட்பட்டு தான் வாழவேண்டும். தன்னைச்சார்ந்த தாய், தந்தை, பாட்டன், பாட்டி, மாமன், மாமி, மனைவி, குழந்தைகள் மற்றும் உடன் பிறந்தோர் போன்றவர்களை நல்வழிப்படுத்தி, தர்மத்திற்குட்பட்டு அவரவர்களுக்கு தான் செய்ய வேண்டிய கடமைகளைக்குறைவில்லாமல் செய்து அவர்களையும் தர்மக்கடன்களாற்கச்செய்து அவர்களின் வாழ்விலும் உயர்வான நல்வினைகளைச்சம்பாதிக்கச்செய்து உயர்வான வாழ்வை அடையச்செய்வதாகும்



### பிறபால் கர்ம யோகம்:

பிறபால் கர்ம யோகமானது உற வல்லாத பிற ஆன்மாக்களுக்கு கடமை யாற்றுவதாகும். தான் ஒழுக்கத்தில் சிறந்து ஓங்கி தர்ம நெறிக்குட்பட்ட வாழ்க்கை நடத்துவதைப்போன்று தம்மால் முடிந்தவரை அவற்றை நம்மோடு நட்பு கொண்டவர்களுக்கும் உபதேசித்து அவரவர் கடமைகளை முறையாகச் செய்வித்து அவரவர்களின் வாழ்விலும் உயர்வான நல்வினைகளை சம்பாதிக்கச்செய்து உயர் வாழ்வை அடையச்செய்வதாகும்.



> கர்ம யோகத்தின் முதல்படி மனதை ஒருமுகப்படுத்துவதாகும் மனம் என்னும் கழனியில் முதல் வித்தாக பக்தி என்னும் வித்தை விதைக்க வேண்டும். பக்தியின் வித்தாக தாம் விரும்பும் ஏதாவதொரு தெய்வத்தை குருவாக ஏற்று வழிபாடு செய்து கொண்டு வரவேண்டும்

### கர்ம யோகத்தின் மூன்று படிகள்

கர்ம யோகத்தின் முதல்படி மனதை ஒருமுகப்படுத்துவதாகும். மனதை ஒருமுகப் படுத்துவதே தியானம் எனப்படும். அலைபாயும் மனதைக்கட்டுப்படுத்தி மனதில் தெளிவு ஏற்படுத்திக்கொள்ள தியானம் உதவும். மனத்தெளிவு பெற்ற பின் மனம் என்னும் கழனியில் முதல் வித்தாக பக்தி என்னும் வித்தை விதைக்க வேண்டும். பக்தியின் வித்தாக தாம் விரும்பும் ஏதாவதொரு தெய்வத்தை குருவாக ஏற்று வழிபாடு செய்து கொண்டு வரவேண்டும்.

கர்ம யோகத்தின் இரண்டாம் படி மனிதநேயமாகும். குருவருள் துணைக் கொண்டு தன்னைப்போன்று இறைவனால் படைக்கப்பட்ட பிற உயிர்களின் உயர்வுகளையும் தாழ்வுகளையும் எண்ணிப்பார்த்தல்; தர்மத்தின் ரூபமாகிய பிற உயிர்களிடத்து இருக்கின்ற உயர்வுகளை மனதில் பதிந்து கொள்ளுதல்; தன் கடமைகளை கர்ம யோகம் மூலம் எவ்வாறு பிறரிடம் செயலாற்றுவது என்பதை அறிந்து தெளிந்து செயலாற்றுதல் போன்றவைகள் கர்ம யோகத்தின் இரண்டாம் படியாகும்.

ஒரு மனிதன் கர்ம யோகத்தைப்பின்பற்றி வாழ்க்கையை நடத்தும் பொழுது ஊழ்வினையானது வாழ்க்கையில் பல சோதனைகளை ஏற்படுத்தி அவனை கடமையைச் செய்ய விடாமல் தடுக்கும் பொழுது, குருவருள் துணைக் கொண்டு கர்ம யோகத்தை குறையில்லாமல் செய்ய மனிதனாகப்பிறந்து உயர்வான கடமைகளையாற்றிக் கொண்டு தர்ம சொரூபம் கொண்ட உயர்வான ஆற்றலை சேமித்து வைத்துக்கொண்டிருக்கும் சித்தர்களை நேரில் கண்டு அவர்களின் ஆசீர்வாதங்களை அடிக்கடி பெற்றுக் கொண்டு வந்தால் ஊழ்வினையின் வீரியம் குறைந்து கர்ம யோகம் முழுமை பெற்று அதன் முழுபலனைக்கொடுத்து உயர்வு ஏற்படுத்தும். குருமார்களின் நேரடி ஆசீர்வாதங்களைப்பெறும் பொழுது அவர்கள் சேமித்து வைத்துள்ள நல்லூழ் ஆற்றலின் ஒரு பகுதியானது ஆசீர்வாதம் பெற்றுக்கொள்பவரின் ஆன்மாவிற்குப் பகிர்ந்தளிக்கப்படுவதால் ஊழ்வினையிலுள்ள தீவினைகள் குறைக்கப்பட்டு கர்ம யோகத்தின் முழுபலனை ஒரு மானிடன் அடைய இறையருள் கூட்டுவிக்கின்றது. எனவே, கர்ம யோகத்தின் மூன்றாம் படி மிக முக்கியமான படியாகும்.

# காயத்ரி மந்திரம்

## தினமும் சொல்வதால் ஏற்படும் நன்மைகள்

காயத்திரி மந்திரத்தை உச்சரிக்கும் போது பல்வேறு அற்புதமான அதிர்வலைகள் தோன்றுவதாகவும், உடலில் உள்ள பல்வேறு பாகங்கள் சிறப்புடன் செயல்படுவதாகவும் ஆராய்ச்சிகளின் முடிவு வெளிப்படுத்தியுள்ள உண்மையாகும். அந்த வகையில் காயத்ரி மந்திரத்தை உச்சரிக்கும் போது ஏற்படும் பல்வேறு நன்மைகளை பார்ப்போம்.

- கம்பீரத் தோற்றம்
- தரமான பேச்சு
- வறுமை, குறை நீங்குதல்
- பாதுகாப்பு வட்டம்
- கண்ணில் அறிவு தெரிதல்
- அபாயம், தேவையற்ற சூழ்நிலை நீங்கும்
- நரம்புகளும், சுரப்பிகளும் ஊக்குவிக்கப்படும்
- அமைதியாய் இருப்பர்
- நற்செயல்களில் ஈடுபடுவர்
- காந்த சக்தி ஆகியவை உருவாகும்.
- வாழ்க்கையில் தடைகளை நீக்கும்
- மூளையை பிரகாசிக்கச் செய்யும்
- உள்ளுணர்வினை தெளி வாக்கும்
- உயர் உண்மைகள் தெரிய வரும் என்றும் கூறப்படுகின்றது.
- மந்திரத்தைத் தொடர்ந்து 3 நிமிடங்கள் ஜபிப் பது உங்களைச் சுற்றியுள்ள மின்சார காந்த அலைகளை தாக்கும். ரத்த ஓட்டம் சீர்படும்.
- ஏழு நிமிடம் தொடர்ந்து ஜபிப்பது உங்கள் மூளை செயல் திறனைக் கூட்டும். உடல் வலுவினைக் கூட்டும். உடலைச் சுற்றியுள்ள காந்த அலைகளில் நல்ல மாறுதல்கள் ஏற்படும்.
- 11 நிமிடம் தொடர்ந்து மந்திரம் ஜபிப்பதும், தியானம் செய்வதும் நரம்பு மண்டலத்திலும், சுரப்பிகளிலும் நல்ல மாற்றத்தினை ஏற்படுத்தும்.
- 22நிமிடங்கள் தொடர்ந்து மந்திரம் ஜபிப் பதும், தியானம் செய்வதும் ஒருவரின் அழிவுப்பூர்வ, ஆக்கப்பூர்வ இரண்டும் இல்லாத நிலைகளில் தடுமாறும் மனதினை நிலைப்படுத்தி தெளிவாக சிந்திக்க வைக்கும். உள் உணர்வினைக் கூட்டும்.
- 31 நிமிடங்கள் தொடர்ந்து ஜெபிப்பது சுரப் பிகளை சீர்ப்படுத்தும். மூச்சு சீராகின்றது. அனைத்துத் திசுக்களும் சீர்படத் தொடங்குகின்றன.
- 62 நிமிடங்கள் தொடர்ந்து ஜபிக்கும் பொழுது மூளையில் 'க்ரே' பகுதியில் மாற் றம் ஏற்படுகின்றது. பிட்யூட்டரி, பீனியல் சுரப்பிகள் நன்கு இயங்குகின்றன.
- இரண்டரை மணிநேரம் தொடர்ந்து ஜெபிக் கும் பொழுது உயர்நிலையினை மனம், மூளை அடைகின்றது. நாள் முழுவதும் ஆக்கப் பூர்வமாகவே செயல்படுவர்.









# கேரளாவில் தெய்வமாக வழிபடும் ப்ரஹ்மராக்ஷஷர்

மக்களுக்கும், உயிரினங்களுக்கும் மிகவும் கெடுதல் புரிபவர்களை ராக்ஷஷர் என்று கூறுவோம், அந்த வகையில் ராக்ஷஷர் என்ற பெயர் கொண்ட அனைத்தையும் ஒருவித அச்சம் நிறைந்த கெட்ட கண்ணோட்டத்துடன்தான் பார்ப்போம். ஆனால் ராக்ஷஷர் என்ற வார்த்தைக்க முன்பு பிரம்ம என்று சேர்த்து 'பிரம்மராக்ஷஷர்' என்று கூறும் போது நாம் அவ்வளவாக பயப்படத் தேவையில்லை.

'பிரம்மராக்ஷஷர்' என அழைக்கப்படும் இவர்கள், துர் பிசாசு அல்ல. பிராமண குளத்தில் பிறந்து வேதங்கள் கற்றுணர்ந்து வறுமையாலும், சில சாபக்கேடுகளாலும் தற்கொலை செய்து கொண்டும், ஸ்தூல ஆத்மாவாக உலவுபவர்களை 'பிரம்மராக்ஷஷர்' என்று அழைக்கப்படுவார்கள்.

இவர்கள் மனிதர்களுக்கும், மிருகங்களுக்கும் உதவிகள் புரிபவர்களாகவே திகழ்வார்கள். இவர்களை நம்பும் மக்களையும், அவர்களின் கோரிக்கையையும் நிறைவேற்றிவைக்கும் சக்தி பெற்றவர்கள் இவர்கள். இவர்களை ஒருசில தீய சக்திகள், ஒருசில மாந்திரிக விஷயங்களுக்கு தவறாக பயன்படுத்தியதால், மக்கள் மத்தியில் இவர்களை பயம் கலந்த கண்ணோட்டத்துடன் பார்க்க வேண்டிய நிலை வந்தது.

ஆனாலும் கேரள மாநிலத்தில் சக்தி வழிபாட்டிற்கு முக்கியத்துவம் தரும் ஆலயங்களில் வெளிப்பிரகாரங்களில்'பிரம்மராக்ஷஷர்'களுக்கு தனியாக சன்னதிகள் இருக்கும். தேவிக்கு படைத்த நிவேதனத்தை இவருக்கும் படைப்பர். நேந்திரம் பழத்தின் பிரியர் இவர். வேறு சில கிரந்தங்களில் இருந்து நாம் புரிந்து கொண்டது என்னவெனில், மெத்த படித்து, அதனால் கர்வம் கொண்டு எவரையும் மதியாது இழிவு செய்து, வெறி செயல்களில் ஈடுபடும் குணமே 'பிரம்மராக்ஷஷம்' என்பதாகும். மிகுந்த தடைகள் மற்றும் கடவுள் நமக்கு அருள்வதில்லை என்ற நினைப்பு கொண்டோர், கேரளாவில் உள்ள ஏதேனும் பகவதி கோவில் சென்று, ப்ரஹ்மராக்ஷஷருக்கு விசேஷ பூஜைகள் செய்து, பின் பகவதியை வழிபட்டு திரும்புகின்றனர். இதனால் அவர்களின் பிரச்சனைகள் எளிதாக தீர்ந்துவிடுவதாக கூறுகின்றனர். தமிழகத்தைப் பொறுத்தவரை 'பிரம்மராக்ஷஷர்' வழிபாடு என்பது மக்கள் மத்தியில் கிடையாது.

# யாகத்தின் சிறப்பு

"ஆற்றலை உருவாக்கவும் முடியாது அழிக்கவும் முடியாது, ஆனால் ஒரு ஆற்றலை இன்னொரு ஆற்றலாக மாற்ற முடியும்", என்பது இயற்பியலின் அடிப்படை என்றுதான் நாம் அறிவோம். உண்மையில் இது படைப்பின் அடிப்படை விதி.

ஆற்றல் நம்மை சுற்றி எல்லா இடங்களிலும் இருக்கிறது.....பல்வேறு பரிணாமங்களில். ரிஷிகளின் கூற்றுப்படி ஆற்றலின் மறுபெயர் பிராணம். ஒவ்வொரு ஆற்றலும் தனக்கென்று ஒரு அதிர்வைக் கொண்டு இருக்கும். ஒரு குறிப்பிட்ட அதிர்வு இடைவெளியில் இருக்கும் ஆற்றலை மட்டும் தான் நம்மால் உணர முடிகிறது. அந்த இடைவெளிக்கு அதிகமாகவோ, குறைவாகவோ இருக்கும் ஆற்றலை நம்மால் உணர முடிவது இல்லை. நம்மால் உணர முடிந்த ஆற்றல், பிரமத்தின் முடிவில்லா ஆற்றலின் சிறிய பகுதி.

ஒரு தீபத்தின் மேல் நம் உள்ளங்கையை வைத்து, பின்பு மேலே உயர்த்த உயர்த்த ஒரு புள்ளியல் வெப்பத்தை உணர்வது நின்று விடுகிறது. வெப்பம் உணர முடியவில்லை, என்பதால் தீபம் அங்கே எரியவில்லை என்று அர்த்தமா?. அப்படி இல்லை. ஒரு குறிப்பிட்ட அதிர்வுக்கு மேல் உணரும் தன்மை நம் உள்ளங்கைகளுக்கு இல்லை. நம்மால் உணர முடிந்த, உணர முடியாத, அரைகுறையாக உணர முடிந்த எல்லா ஆற்றல்களும் படைப்பில் இருக்கிறது. ஆற்றலை உணர்வது நம் தனிப்பட்ட உணரும் தன்மையையும், அதன் மீதான கவனத்தின் ஆழத்தையும் பொறுத்தது.









யாகத்தில் தேவ தேவியர்கள் தங்களைத் தோற்றுவிப்பர். அவர்களின் உருவங்களை புகைப்படத்துடன் காணலாம். தியான் ஆசிரம சாதகர்களால் எடுக்கப் பட்டவற்றில் சில, உங்கள் பார்வைக்கு.



நாம்மால் முழுமையாக உணர முடியாத ஆற்றலை உள்வாங்க ரிஷிகள் உபயோகித்த வழிதான் யாகங்கள். யாகங்கள் தேவர்களுக்கு அளிக்கும் ஊட்டம். புரியும்படி சொல்லப் போனால் அவர்களுக்கு அளிக்கும் உணவு. யாகங்கள் தேவர்களுடனான தொடர்பை ஏற்படுத்தும். இதன் மூலம் பிறப்பிக்கப்படும் ஆற்றல் படைப்பை சிறப்பாக இயக்கும். யாகங்களின் நோக்கம் அதுவே.

யாகத்தில் தேவர்களுக்கான படையலை மந்திர ஜெபத்துடன் சேர்த்து அக்னியில் படைக்கப்படுகிறது. அக்னியில் இடும் திடப்பொருள் நுண்பொருளாக மாறும். சொல்லப்படும் மந்திரம் தெய்வீக சக்தியை வெளிப்படுத்தும். தேவர்களின் இந்த அருள் இந்த உலகத்தை இயக்க துணை செய்வதோடு, யாகத்தை செய்பவர்களுக்கும் அழகும் மென்மையும் அளிக்கும்.

எளிமையான யாகம் செய்யும் முறை. காப்பரில் செய்யப்பட்ட ஒரு யாக குண்டத்தில், பசுச் சாணம், எள், குகுள் எடுத்துக் கொள்ளுங்கள். கற்பூரத்தின் மூலம் தீபம் ஏற்றி, நாட்டுப் பசுவின் நெய்க் கொண்டு மந்திர ஜெபத்துடன் யாகம் செய்யலாம். இதுப் பற்றி விவரம் பெற தியான் ஆசிரமத்தை அணுகலாம். இதே முறையை ஒரு மெழுகுவர்த்தி முன்பு இருந்தும் செய்து பாருங்கள்.

யாகம் செய்யும் போது, அதன் அக்னியை உணருங்கள். நீங்கள் ஒரு குளுமையையும், ஒரு விதமான கூச்சத்தையும் உணரலாம். மெழுகுவர்த்தியின் முன்னால் இந்த அனுபவத்தை பெற முடியாது. தனிப் பட்ட முறையில் நான் பல ஆய்வுகளை செய்து இருக்கிறேன். பல முறை மக்கள் யாகத்தில் கைவைத்து முயற்சி செய்து உள்ளனர். அந்த சமயம் எந்த ஒரு வெப்பமும் கைகளில் உணர்வது இல்லை. இதுப் போன்ற ஒரு ஒளிப்பதிவை www.dhyanfoundation.com என்ற இணையத்தில் காணலாம்

ஆனால் மிக முக்கியமான ஒரு செய்தி, மந்திரம் என்பது ஏற்கனவே சிக்தி பெற்ற ஒருவரிடம் இருந்து பெறப்பட வேண்டும். குரு என்பவர் அதற்காக பணமோ பொருளோ வாங்குபவர் இல்லை. வியாபரத்துடன் பிணைக்கப்பட்ட வேத அறிவியலுக்கு எந்த சக்தியும் இல்லை. யோகி அஷ்வினி, தியான் அஷிரமத்தின் வழிகாட்டி.

உலகம் முழுவதும் இலவச யோகப் பயிற்சி தியான் ஆசிரமத்தால் நடத்தப்படுகிறது தொடர்பு கொள்ள: 9841430369

www.aanmeegamalar.com





www.aanmeegamalar.com



# நலம் தரும் அஷ்ட யோகினி



அசுரர்களுடன் காளிதேவி போரிடும் சமயத்தில், காளியின் வியர்வை துளிகளில் இருந்து பிறந்தவர்கள் தான் 'யோகினிகள்'. இவர்கள் ஆயிரமாயிரம் இருப்பினும், முதன்மையாக கருதப்படுவோர் 64 ஆவர். காளியின் குழந்தைகளாக கருதப்படும் இவர்களை, நம் ஆத்மார்த்த அன்புடன் பூஜித்து வர நம் அனைத்து துன்பங்களையும் நீக்கி சுக வாழ்வு வாழ வைப்பர்.

யக்ஷினி, கின்னரர்கள், யக்ஷர்கள், கந்தர்வ மற்றும் அப்சரஸ்களை போல் அல்லாமல் நமக்கு நற்பலன்களை மட்டுமே அள்ளித்தருவது இவர்களின் சிறப்பு. யோகினி உபாசனை பற்றி திருமூலர் திருமந்திரத்திலும் கூறியுள்ளார்.

அந்த வகையில் மிகவும் சிறப்புவாய்ந்த யோகினிகளாக கருதப்படும் அஷ்ட யோகினிகள் பற்றியும், அந்த அஷ்ட யோகினிகள் செய்யும் நல்ல பலன்களைப் பற்றியும் பார்ப்போம்:

**சுர சுந்தரி யோகினி:** மூப்பை தடுக்கும், நமக்கு புற அழகை கொடுக்கும் இவள் சிறந்த மனத்தெளிவையும் கொடுக்க வல்லாள்.

**மனோஹர யோகினி:** காளியின் ரூபமாகவே கருதப்படும் இவளை வழிபட நல் உறவுகள் பலப்படும்.

**கனகாவதி யோகினி:** வியாபாரம் மற்றும் தொழில் செய்வோர் அவசியம் உபாஸிக்க வேண்டிய தேவி இவள். தொழிலின் மூலம் நல்ல லாபங்களை கொடுக்கும் யோகினி.

**காமேஸ்வரி யோகினி:** விரும்பிய துணை, நிலையான திருமண பந்தம், நல்ல தாம்பத்யம் பெற இந்த யோகினியின் அருள் அவசியம்.

**ரதி சுந்தரி யோகினி:** செல்வம், வீடு பேறு போன்றவற்றை அருளும் யோகினி இவர்.

**பத்மினி யோகினி:** அனைத்து காரியங்களிலும் வெற்றியை தருபவர்.

**நதினி யோகினி:** அதீத சக்தி கொண்டவள் அதே சக்திகளை தம்மை உபாசிப்போருக்கும் அருள்பவள்.

**மதுமதி யோகினி:** அனைத்து பிரச்சனைகளிலும் இருந்து விடுதலையளிப்பவள்



## வாருங்கள் எங்களுடன் பயணிக்க...

உலக அளவில் இமெயில் மூலம் இலவச இதழாக வெளிவரும் நமது இதழில் ஆன்மிக நாட்டமும் விருப்பமும் உள்ள அன்பர்கள் வரவேற்கப்படுகிறார்கள்.

உங்களுக்கு தெரிந்த திருக்கோயில்கள், மகான்கள், சித்தர்கள், இந்துமத சடங்கு-சம்பிரதாயம் போன்றவற்றை

(உங்களது பெயர், முகவரி, தொ.பே.எண்ணுடன்)

எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். நமது வாசகர்கள் பயன்படுத்த பிரசுரிப்போம். தெரியாதவர் தெரிந்து கொள்ள எங்கள் பயணத்தில் நீங்களும் இணைந்து பயணியுங்கள்

தொடர்பு கொள்ளவும்:
ஆசிரியர்: நாகராஜன்
16, பாரதீஷ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம்
பொன்மணிமாளிகை அருகில்,
சென்னை 600024, தமிழ்நாடு, இந்தியா
தொலைபேசி 7299992699/ 8939499598

## மனித வாழ்வு மேம்படுவதற்காக

# பரமஹம்ஸ யோகானந்தர்

## அருளிய வழிமுறைகள்

எண்ணற்ற பெரிய மகான்கள் மற்றும் சிறந்த யோகிகளை ஈன்றெடுத்த பாரதம் என்றென்றும் ஆன்மீகத்தில் முன்னணியில் உள்ளது. அதனால் பல மகோன்னத குருமார்கள் மற்றும் சிறந்த யோகிகள் நிறைந்து விளங்குகிறது நம் பாரத நாடு. அவர்களில் ஒருவர்தான் குருதேவர் ஸ்ரீஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தர். இவர் மூலமாக இக்காலக்கட்டத்தில் விலை மதிப்பற்ற கிரியா யோக விஞ்ஞானத்தை நமக்கு அளித்திருக்கிறது. யுகயுகங்களாக மனிதனுள் இருக்கும் தெய்வீக ஆற்றலைத் தேடுவதற்காகவே தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்த உன்னத மகான்களுக்கு நாம் எவ்வளவு நன்றிக்கடன்பட்டிருக்க வேண்டும்! பாரதம் பரமஹம்ஸ யோகானந்தரின் போதனைகள் மூலமாக இன்று எதை அளித்திருக்கின்றதோ அதன் மதிப்பு ஈடு இணையற்றது. இன்றைக்கு மனிதனின் ஆன்மாவை மேம்படுத்திக் கொள்வதற்கான ஓர் ஆன்மீக உத்திதான் ‘கிரியா யோகம்’. நம் பாரதத்திலிருந்து ஒரு மகாகுரு பழமையான விஞ்ஞானத்தை இன்றைய நாளில் நமக்காக அருளி வழங்கியிருக்கிறார். இறைவனால் இவ்வுலக மக்களுக்காக அனுப்பி வைக்கப்பட்ட ஒரு மகாபுருஷரான குருதேவர் ஸ்ரீஸ்ரீபரமஹம்ஸ யோகானந்தர் ஜகத்குரு ஆவார்.

இந்தக் கிரியா யோகத்தை பகவான் ஸ்ரீகிருஷ்ணன் அர்ஜீனனுக்கு உபதேசம் செய்தார். அதன்பின்னர் காலப்போக்கில் இந்த யோகம் மறைந்துவிட்டது. பின்னர் மகாவதார பாபாஜியால் அவருடைய சீடரான லாஹிரி மகாசயருக்கு உபதேசிக்கப்பட்டது. பின்னர் அவர் தன் சீடரான ஸ்வாமி ஸ்ரீயுக்தேஸ்வர் கிரிக்கும் அவர் தன் சீடரான பரமஹம்ஸ யோகானந்தருக்கும் கிரியா உபதேசத்தை அருளினார். இப்பொழுது யோகதா சத்சங்க மற்றும் செல்ஃப்ரியலைசேஷன் பாதையில் வந்தவர்கள் பயிற்சி செய்து கொண்டிருக்கின்றனர். எதிர்காலத்தில் இப்பாதையில் வரும் சீடர்கள் அனைவரும் கிரியா யோக உபதேசத்தைப் பெறுவர்.

ஒரு யோகியின் சுயசரிதம் மற்றும் பல மேன்மையான நூல் களை எழுதி அருளியுள்ள பரமஹம்ஸ யோகானந்தர் 1893ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5ஆம் தேதி வடகிழக்கு இந்தியாவில் இமயமலைக்கு அருகிலுள்ள கோரக்பூரில் பிறந்தார். தாயார் ஞானபிரபாகோஷ். தந்தை பகவதி சரண்கோஷ். வங்காளியரான இவர்கள் க்ஷத்திரிய குலத்தைச் சேர்ந்தவர்களாவர். தாயார் அன்பின் அரசியாகவும் கனிவு உள்ளம் கொண்டவராகவும் இருந்தார். தந்தை ஆழ்ந்த சிந்தனையும் கண்டிப்புடையவராகவும் இருந்தார். இவர்கள் இருவரும் மகாவதார பாபாஜியின் சீடரான லாஹிரி மகாசயரின் சிஷ்யர்களாவர்.



ஒரு மனித பிறவியெடுத்து பூமிக்கு வந்தால் அவர் தன் பிறவிகளில் செய்த கர்மவினைகளுக்கேற்ப மீண்டும் மீண்டும் பல பிறவிகள் எடுத்து, இறுதியில் ஒரு பிறவியில் இறைவனடி சேருவார். யாருமே தாமா கவே இறைவனடி சேர இயலாது. அதற்கு குரு தேவை; குரு என்றால் இறைவனுடன் இணைந்த குரு. அவர்தான் உண்மையான குரு. கர்மவினைகளை துடைக்கக் கூடிய ஓர் உண்மையான குரு. அப்படிப்பட்ட குருதான் பரமஹம்ஸ யோகானந்தர். பிறருடைய கர்மவினைகளை தீர்த்து, இவ்வுலகில் வாழும் வரையிலும் வாழ்விற்குப் பின்னரும் மகிழ்ச்சியாக வாழ்வது எப்படி என்ற வழிமுறைகளை பரமஹம்ஸர் பல்வேறு முறைகளில் வகுத்து போதிக்கிறார். மனித வாழ்வு மேம்படுவதற்காக அவர் அருளியவைகளில் சிலவற்றை குறிப்பிட விரும்புகிறேன்.

பரமஹம்ஸர் மகாவதார பாபாஜியின் வம்சபரம் பரையில் வந்தவராவார். லாஹிரி மகாசயரின் சீடரும் பரமஹம்ஸரின் குருவுமான ஸ்வாமி ஸ்ரீ யுக்தேஸ்வர் கிரியை அவர் குருவாக ஏற்றுக் கொண்டு அவருடன் ஆசிரமத்தில் வாழும் போது, ஒரு நாள் பரமஹம்ஸரிடம் ஸ்வாமி ஸ்ரீ யுக்தேஸ்வர் கிரி இவ்வாறு கூறினார்; “1894ஆம் ஆண்டில் நடக்கவிருக்கும் கும்பமேளாவிற்குச் செல்ல மகாவதார பாபாஜி என்னை ஊக்குவித்தார். அதற்கிணங்க நான் அங்கு சென்றேன். நான் பாபாஜியை சந்தித்தேன். அவ்வமயம் அவர் என்னிடம் கூறியதாவது; கீழை நாடுகள் மற்றும் மேலை நாடுகளுக்கிடையே வரப்போகும் இணக்கமான பரிமாற்றத்தில் நீங்கள் ஆற்றவேண்டிய பங்கு உள்ளது. சில வருடங்களுக்குப் பிறகு நான் உங்களிடம் அனுப்பும் ஒரு சீடனுக்கு மேலை நாடுகளில் கிரியா யோகத்தைப் பரப்புவதற்கு நீங்கள் பயிற்சி அளிக்க வேண்டும். அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் எழுச்சி பெற காத்திருக்கும் உள்ளார்ந்த சக்திவாய்ந்த மகான்களை நான் காண்கிறேன்”.

இறைவனின் அன்புக்கட்டளைக்கிணங்க பாபாஜியின் வழிகாட்டுதலில் பரமஹம்ஸரை ஸ்வாமி ஸ்ரீ யுக்தேஸ் வர் கிரி 1920ஆம் ஆண்டில் அமெரிக்காவிற்கு சர்வதேச மிதவாதிகளின் மகாசபைக்கு இந்தியப் பிரதிநிதியாக அனுப்பி வைத்தார்.

அதற்கு முன்னர் 1917ம் ஆண்டில் பரமஹம்ஸர் “யோகதா சத்சங்க சொசைடி ஆஃப் இந்தியா” என்னும் பெயரில் ஜார்கண்ட் மாநிலத்திலுள்ள ராஞ்சியில் தியான ஆலயம் நிறுவினார். செல்ஃப்ரியலைசேஷன் ஃபெலோ ஷிப் ஸ்தாபனத்தின் சர்வதேச தலைமையகத்தை அமெரிக்காவிலுள்ள லாஸ் ஏஞ்ஜலீஸில் 1925ம் ஆண்டில் நிறுவினார்.

அமெரிக்காவில் பரமஹம்ஸர், தன் சொற்பொழிவுகளில் இறைவனை தேடிக் கண்டுபிடிப்பது மட்டுமின்றி, மகிழ்ச்சியாக வாழ்வது எப்படி என்றும் அதற்கான வழிமுறைகளையும் கூறியதல்லாமல் அவற்றை மக்களுக்காகவே அவர் விட்டுச் சென்றுள்ளார். மக்களின் வாழ்விற்கு மிகவும் தேவையான ‘கவலை உணர்வை களைதல்’ என்பது பற்றி அவர் கூறுகிறார்;

“உங்களுடைய பகைவர்களைக் கூட நீங்கள் வெறுக்கக் கூடாது. எவரும் முழுவதும் கெட்டவர்கள் இல்லை”. அதற்கு ஓர் உதாரணத்தை அவர் கூறுகிறார். “ஒரு குறைபாடுடைய விசைக்கட்டைகளைக் கொண்டுள்ள பியானோவை யாராவது இசைப்பதை நீங்கள் கேட்டால் முழு பியானோவே கெட்டுவிட்டதாக உங்களுக்குத் தோன்றும். ஆனால் குறைபாடு எங்கே உள்ளது என்று ஆராய்ந்தால் ஒரு விசைக்கட்டையில் தான் உள்ளது என்று தெரியவரும். அதைச் சரிசெய்தால் பியானோ முழுவதுமே நன்றாக இருப்பதை நீங்கள் அறிவீர்கள். இறைவன் அவருடைய குழந்தைகள் அனைவருள்ளும் வாழ்கிறான். யாரையாவது வெறுப்பதென்றால் அது உங்களிடத்திலும் மற்றவர்களிடத்திலும் உள்ள அந்த இறைவனையே வெறுப்பதாகும். இந்த உலகம் இறைவனின் ஆய்வுக்கூடமாகும். மாசுபடிந்த நமது தெய்வீக அமரத்துவ நிலை, அகந்தை உணர்வின் கீழ் புதைந்து கிடக்கிறது. அது ஒருமுறை வெளிப்படுமாறு நிலையற்ற மனித வாழ்வு என்னும் அனுபவத்தில் நாம் நம்மை எரித்துக் கொள்கிறோம். எனவே நீங்கள் கவலையைவிட்டு உங்கள் சொந்த அறிவோடு இருங்கள். அனைவரையும் நேசியுங்கள்”.

பரமஹம்ஸர் மேலும் கூறுகிறார்.

"உங்களுடைய பிரச்சனைகளை இறைவனிடம் அர்ப்பணியுங்கள்; நீங்கள் கவலைப்பட்டீர்களானால் அது நீங்களாகவே ஏற்பாடு செய்து கொள்ளும் உங்கள் இறுதிச்சடங்காகும். உங்களுடைய கவலைகளினால் உயிருடன் புதைக்கப்படுவதை நீங்கள் விரும்பமாட்டீர்கள் அல்லவா? கவலையினால் துன்பப்பட்டு ஏன் ஒவ்வொரு நாளும் நீங்கள் சாகவேண்டும்? ஏழ்மை, துன்பம், ஆரோக்கியக்குறைவு ஆகியவற்றால் நீங்கள் துன்புற்றுக் கொண்டிருக்கிறீர்கள் என்றால் பலபேர் உங்களைவிட நூறு மடங்கு அதிகமாக துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நீங்கள் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும்."

மனக்கவலை, வராத நோயையும் வரவழைக்கிறது. அதனாலேயே பல்வேறு துன்பங்களை அனுபவிக்க நேருகிறது. அந்த சூழ்நிலை உடனிருப்பவர்களுக்கும் தொல்லை தருகிறது. மனக்கவலையினாலேயே பலபேர் உயிரையும் இழக்க நேருகிறது. கவலையுற்ற ஒரு மனிதனுக்கு நரகம் வேறு எதுவுமில்லை. அந்த வாழ்வே அவனுக்கு நரகமாகிவிடுகிறது. மருத்துவர், நோய்க்கு மருந்தைத் தருவது போன்று பரமஹம்ஸ யோகானந்தர் கவலையை தீர்க்க அருள்பொதிந்த சிறந்த அறிவுரைகளை தந்திருக்கிறார்.

மேலும் அவர் கூறுகிறார்; "எதிலும் கண்மூடித்தனமாக இருக்காதீர்கள்; தொல்லைகளிலிருந்து படிப்படியாக மீள முயற்சி செய்யுங்கள். பிரச்சனை எதுவாகயிருந்தாலும் அதைத் தீர்க்க ஒரு மாபெரும் முயற்சி செய்யுங்கள். உங்களுக்கு முதலில் சகிப்புத்தன்மை வேண்டும். அதை நீங்கள் பழக வேண்டும். எதற்கும் சமமான மனநிலையுடன்கூடிய சகிப்புத்தன்மை. நான் இந்த மனநிலையை பழகியிருக்கிறேன். எவ்வாறெனில் கடுமையான குளிர்காலத்தில் பனிக்கட்டி போன்ற குளிர்ந்த நீரில் அமர்ந்து இரவு முழுவதும் தியானம் செய்திருக்கிறேன். அதுபோன்று காலையிலிருந்து மாலை வரை இந்தியாவில் தகிக்கும் சூடான மணலில் அமர்ந்து இருந்திருக்கிறேன். அவ்வாறு செய்ததால்தான் பெரும் மன வலிமையைப் பெற்றேன். அதுபோன்று மனக்கட்டுப்பாட்டை நீங்களும் பழகிக் கொள்ளுங்கள். எந்தத் தொல்லைகளும் உங்களை ஊடுருவ முடியாது. எதையாவது ஒன்றைச் செய்ய முடியாது என்று நினைத்தால், உங்கள் மனம் ஓர் அடிமைதான். அதிலிருந்து உங்களை விடுவித்துக் கொள்ளுங்கள். மனதை பலவீனமாக்குவது நோயை வரவழைப்பதற்காக எனப் பொருளாகும்."

"கவலையானது உங்கள் முயற்சிகளை முடக்கிவிடும். நீங்கள் உங்களாலான பெருமுயற்சி செய்தால் இறைவன் அவனுடைய திருக்கரத்தை நீட்டி உங்களுக்கு உதவி செய்வான்".

இரவில் கவலையினால் தூக்கமின்றித் தவிப்பவர்களுக்கு அவர் அறிவுரை கூறுகிறார். "தூக்கம் ஓர் அருளாசியாகும்". அவர் தொடர்கிறார். "எத்தனையோ பேர் இரவில் தூங்காமல் அவதிப்படுகின்றனர். என்ன பிரச்சனையாக இருந்தாலும், நன்றாகத் தூங்கும்பொழுது அந்தப் பிரச்சனையிலிருந்து விடுபட்டிருக்கிறீர்கள். மனதின் முழு சக்தியையும் பயன்படுத்தாவிடில் அதனுடைய அற்புத ஆற்றலை நீங்கள் உணரமாட்டீர்கள்".

பரமஹம்ஸர் தன்னுடைய உண்மை நிகழ்வு ஒன்றினை கீழ்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்;

வாஷிங்டனில் டி.சி.யில் ஓர் இளம்பெண் அவரிடம் வந்து கூறியதாவது; "எனக்கு நீடித்த இருதயக் கோளாறு உள்ளது. நான் ஒரு நிபுணரை கலந்தாலோசித்தேன். ஆனால் எனக்கு சிறிதும் குணமாகவில்லை. நீங்கள் எவ்வகையிலாவது எனக்கு உதவ முடியுமா? என்று கேட்டார். உடனே அவள் மனதை, அவர் ஊடுருவிப்பார்த்து, பிரச்சனை என்னவென்று புரிந்துக் கொண்ட பின்னர், "உனக்கு இருதய நோய் இல்லை; நான் எப்பொழுதாவது உண்மையை சொல்வது உண்டெனில், அது இப்பொழுது தான். நாளைக்கும் கூட உனக்கு இருதயக் கோளாறு இருந்தால் நான் ஒரு மகாப்பொய்யன் என்று நீ கூறிவிட்டு என்னைப் பற்றிய எல்லாவற்றையும் மறந்துவிடலாம். ஆனால் உன்னுடைய வியாதி மறைந்துவிடும் என்று எனக்குத் தெரியும்" என்று பரமஹம்ஸர் அவளிடம் கூறினார்.

"எப்படி" என்று அவள் வினவினாள். அதற்கு பரமஹம்ஸர் ஒரு கேள்வியுடன் பதிலளித்தார். "சமீபத்தில் உனக்கு ஒரு துயரமான காதல் சம்பவம் நிகழ்ந்ததா? மிகவும் வேதனையான ஒன்று?"

அதற்கு அவர் ஆச்சரியத்துடன், "ஆமாம், உங்களுக்கு எப்படி தெரியும்?" என்று கேட்டாள்.

"இது உண்மை அல்லவா"? பரமஹம்ஸர் தொடர்ந்தார், "நீ அந்த துன்பமான அனுபவத்தைப் பற்றியே இரவும் பகலும் நினைத்துக் கொண்டிருக்கிறாய்" என்று அவர் சொன்னார். உடனே அவள் தலை குனிந்தாள். அது உண்மை என்று ஒப்புக்கொண்டாள். "நீ உன் மன சோகத்தைக் கைவிட வேண்டும்". அவர் அவளிடம் கூறினார் "பால் சிந்திவிட்டது; இப்பொழுது எதற்காக அழ வேண்டும்? உன் அன்பை மதிக்கும் ஒருவரைத் தேடு. உன்னை நேசிக்காத ஒருவனுக்கு விசுவாசமாக இருப்பதில் அர்த்தமில்லை. நீ முன்பு நேசித்தவன், வேறு ஒருத்தியிடம் உல்லாசமாக அனுபவித்துக் கொண்டிருக்கிறான். நீயோ இங்கு அவனுக்காக பிரயோஜனமின்றி ஏங்கிக் கொண்டிருக்கிறாய்". அவனை மறந்துவிட முயற்சிப்பதாக அவள் கூறினாள். "வெறும் முயற்சி மட்டும் அல்ல" என்று பரமஹம்ஸர் வலியுறுத்தினார், "கட்டாயம் மறந்தாக வேண்டும். இந்த நிமிடமே! இந்த மனிதனை உன் மனத்திலிருந்து விடுவித்துவிடு" என்று அவர் கூறினார்.

சிறிது காலம் கழித்து அவள் மீண்டும் பரமஹம்ஸரிடம் வந்து கூறினாள். "நீங்கள் கூறியது சரியே அம்மனிதனைப் பற்றியும் என் துக்கத்தைப் பற்றியும் நிறுத்திய அக்கணமே என் இதயத்துடிப்பு இயல்பான நிலைக்கு வந்துவிட்டது".

இவ்வாறு தேவையின்றி ஒவ்வொரு மனிதனும் கவலைக்குள்ளாகின்றனர். பிரச்சனையின் உண்மைக் காரணம் என்னவென்று கண்டு பிடித்து அதைத் தீர்ப்பதற்கு முயற்சி செய்தால் பிரச்சனையின்றி வாழலாம். அதற்கு மன வலிமையும் சகிப்புத் தன்மையும்தான் மிகவும் முக்கியமாகத் தேவை என்று பரமஹம்ஸர் போதிக்கிறார்.

எல்லா சக்திகளுக்கும் மேலாக, இறை சக்தி ஒன்று உள்ளது. மனிதனுக்கு எப்படிப்பட்ட துன்பம் வந்தாலும் அதைத் தாங்கிக் கொள்வதற்கான மனவலிமையை இறைவனே தந்திருக்கிறான். அதுமட்டுமின்றி பிரச்சனைகளிலிருந்து நம்மை நாமாகவே காப்பாற்றப்படுவ தில்லை. அதையும் இறைவ னேதான் செய்கிறான். இறைவன் நம்மை இடைவிடாமல்மின்சார ரயில் போன்றுபிடித்துக்கொண்டிருக்கிறான். ஏனென்றால் நாம் அனைவரும் இறைவனின் பிரதிபிம்பம். இறைவன் என்றும் நம்மை கைவிடமாட்டான். தகுந்த நேரத்தில் தகுந்த புத்திசமயோசித புத்தியைஇறைவன்தான் நமக்கு தருகிறான். அதை மனிதனாகப் பிறந்த நாம் அனைவரும் உணர வேண்டிய ஒன்றாகும்.

மிகக் கடுமையான குளிர்கால பருவத்தில், இமாலயத்தில் ஒன்றுமே உடுத்திராத ஒரு மகானை கண்டேன். "உங்களை குளிர் பற்றாதா? என்று நான் கேட்டேன்" அதற்கு அந்த மகான், "இறைவனின் அன்பெனும் கதகதப்பில் நான் இருக்கும்போது, எப்படி நான் குளிரை உணரமுடியும்?" என்று இனிமையாகப் பதிலளித்தார்.

பரமஹம்ஸர் மற்றொரு நிகழ்வினையும் கூறுகிறார்; "மிகக் கடுமையான குளிர்கால பருவத்தில், இமாலயத்தில் ஒன்றுமே உடுத்திராத ஒரு மகானை கண்டேன். உங்களை குளிர் பற்றாதா? என்று நான் கேட்டேன்" அதற்கு அந்த மகான், "இறைவனின் அன்பெனும் கதகதப்பில் நான் இருக்கும்போது, எப்படி நான் குளிரை உணரமுடியும்?" என்று இனிமையாகப் பதிலளித்தார். "இவர்களைப் போன்ற மகான்கள் உணவின்றி, கண்ணிற்குத் தெரியக்கூடிய எந்தப் பாதுகாப்புமின்றி மன்னர்களைப் போன்று அமைதியாக கவலையின்றி இருக்க முடியுமென்றால் நீங்கள் ஏன் அவ்வாறு இருக்க முடியாது?" என்று பரமஹம்ஸர் கேட்கிறார். இவ்வாறு கவலை உணர்வை வேரோடு பிடுங்கிவிடும்பொழுது அங்கே துன்பத்திற்கும் மன உளைச்சலுக்கும் வழியிரா. அதற்குப் பதிலாக மகிழ்ச்சி தான் மிஞ்சும். ஒரு மனிதன் எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்கிறான் என்றால் அம்மனிதன் இறைவனுடன் இருக்கிறார் என்று பொருளாகும்.

பரமஹம்ஸர் கூறுகிறார், "ஒவ்வொருவரும், பார்க்க விரும்பும் ஒரு மலர் போன்று ஆகும் வரை மற்றவர்களைப் பற்றி அக்கறை மற்றும் அன்புடமை ஆகியவற்றை பயிற்சி செய்யுங்கள். ஒரு மலரிலுள்ள அழகாகவும் ஒரு தூய மனதிலுள்ள வசீகரமாகவும் இருக்கும்பொழுது மனிதன் மற்றும் இறைவன் ஆகிய இருவராலும் நேசிக்கப்படுவீர்கள்?".

இவ்வாறிருக்க, எப்பொழுதும் கவலைப்பட்டுக் கொண்டிருந்தால் மற்றவர்களைப் பற்றி அக்கறை கொள்ளவோ அவர்களுக்கு சேவை செய்யவோ இயலாது. பிறருக்குச் சேவை செய்வதினாலே முழு கவலையும் நம்மைவிட்டுப் போய்விடும், மனித சேவைதான் இறை சேவை. பிறருக்குச் செய்யும் சேவையினால் கவலையை களைவது மட்டுமின்றி மனம் எப்பொழுதும் இனம் புரியாத ஓர் ஆனந்தத்தில் மிதந்து கொண்டிருக்கும். மனிதனின் மனம் மலர்போன்று ஆகவேண்டும் என்கிறார் பரமஹம்ஸர். அதற்கு எந்தக் கவலையுமின்றி மனம் ஆரோக்கியமாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அவர் கூறுவது போன்று மனம் மலராகிவிடும். அதற்கு மனிதன் முயற்சி செய்தால் கட்டாயம் மனதை மலராக்கலாம். அவ்வாறு செய்தால்தான் இறைவனை அடைய முடியும்.

பரமஹம்ஸர் கூறுகிறார்; "பரமாத்மாவின் எல்லையற்ற இருப்பு எப்பொழுதும் உங்களுக்குள் இருக்கிறது என்பதை உணர்ந்துகொண்டு அவனிடம் கூறுங்கள், "வாழ்விலும் சாவி லும் சுகத்திலும் சுகவீனத்திலும் நான் கவலைப் படமாட்டேன். ஏனென்றால் ஓ இறைவா, நான் என்றுமே உந்தன் குழந்தை".

குருப்பிரியா, செல் நெ.9894595909
Yogoda Satsanga Society of India
Website Address www.yssofindia.org

# மனிதனை மிருகமாக்கும் அரிஷத்வர்கம்

அரிஷத்வர்கம் என சொல்லப்படும் மனிதனின் ஆறு எதிரிகளும், மனிதனின் மனதினுள்ளேயே மறைந்திருந்து அவனை மெல்ல மெல்ல அழிக்கின்றன. அரி என்றால் எதிரி எனவும், ஷத் என்றால் ஆறு எனவும், வர்கம் என்றால் குழு எனவும் பொருள்படும்.

ஒவ்வொன்றும் மனிதனின் வாழ்க்கையில் மிகப்பெரும் பேரழிவை ஏற்படுத்தும் இயல்புடைய குணங்களாகும்.

பக்தி நிலையைப் பொறுத்தவரை இந்த ஆறு குணங்களும் மனிதன் இறைவனின் திருவருளைப் பெற விடாமல் தடுக்கும் 'எதிரிகள்' என சொல்லப்படுகின்றது.

1. காமம் தீவிர ஆசை
2. குரோதம் கோபம்
3. லோபம் பேராசை
4. மோகம் மருட்சி
5. அகங்காரம் இறுமாப்பு
6. மதஸர்யம் பொறாமை

## காமம்

காமம் என்றால் "அவா" அல்லது "ஆசை" எனப் பொருள்படும். தர்மநியதிக்கு உட்பட்ட ஆசை ஆக்கத்தை தரும். அதுவே தர்மநியதிக்கு எதிரான ஆசை அழிவையே தரும். பணம், பொருள், புகழ், பதவி போன்றவற்றின் மீது தீவிர ஆசை கொள்வது குற்றமாகும். எனவே, ஆசையை அடக்கிடுக.

## குரோதம்

குரோதம் என்றால் "கோபம்" அல்லது "சினம்" எனப் பொருள்படும். ஆசைபட்ட ஒரு பொருளை அடைய முடியாமல் போய்விட்டால், அந்த ஆசை கோபமாக மாறும். கோப உணர்ச்சி மனத்தின் செயல்பாடுகளில் சஞ்சலங்களை ஏற்படுத்தி, வாக்கையும் செயலையும் பாதிக்கும். கோபத்தால் எழும் வாக்கும் செயலும் எப்போதும் சரியானதாக இருப்பதில்லை. எனவே, சினத்தைப் போக்கிடுக.



## லோபம்

லோபம் என்றால் "பேராசை" அல்லது "வெஃகுதல்" எனப் பொருள்படும். தேவைக்கு அதிகமான ஒன்றை அடைவதற்காக ஆசை கொள்வது பேராசை எனப்படுகின்றது. அதேபோல மற்றவருக்கு சொந்தமான ஒன்றை அடைய முயல்வது வெஃகுதல் எனப்படுகின்றது. வேண்டியது கிடைத்தால் அதைக் கொண்டு திருப்தி கொள்ள வேண்டும். அதைப் போலவே மேலும் மேலும் வேண்டும் என்று பேராசை கொள்ளக் கூடாது. ஆகவே, பேராசையைத் தவிர்த்து விடுக.

## மோகம்

மோகம் என்றால் "மருட்சி", "பற்றுதல்" அல்லது "மயக்கம்" எனப் பொருள்படும். ஒரு பொருளின் மீது கொண்ட அளவற்ற பற்றுதலினால் அதை எப்படியாவது அடைய வேண்டும் என்ற எண்ணம் தோன்றுகின்றது. இதுவே ஒருவனை பல தீயசெயல்களிலும் ஈடுபடத் தூண்டுகின்றது. எனவே, மருட்சியை நீக்கிடுக.

## அகங்காரம்

அகங்காரம் என்றால் "இறுமாப்பு" அல்லது "செருக்கு" எனப் பொருள்படும். பதவி, கல்வி, அறிவு, செல்வம் போன்றவற்றை ஒருவன் மற்றவர்களைக் காட்டிலும் அதிகமாக கொண்டிருக்கும் போது அவனிடம் செருக்கு ஏற்படுகின்றது. அகங்காரம் என்ற எதிரி ஒருவனின் மனத்தில் அவன் மற்றவர்களைக் காட்டிலும் உயர்ந்தவன் என்ற கண்மூடித்தனமான நம்பிக்கையைத் தூண்டுகின்றது. இதனால் அவன் சக மனிதர்களிடம் மரியாதை, கருணை போன்ற அடிப்படை நற்குணங்கள் இன்றி செயல்படுகின்றான். ஆகவே, செருக்கை ஒழித்திடுக.

## மத்ஸர்யம்

மத்ஸர்யம் என்றால் "பொறாமை" எனப் பொருள்படும். தன்னை விட வேறு எவனும் கல்வி, பதவி, அறிவு, செல்வம் போன்றவற்றில் உயர்ந்து விட கூடாது என்ற ஓர் எண்ணம் தான் பொறாமை ஆகின்றது. மற்றவர்களின் அறிவாற்றல், திறமைகள், செல்வம் போன்றவற்றைக் கண்டு பொறாமை கொள்பவர்கள் அவற்றை எப்படியாவது அழித்துவிட எண்ணம் கொள்வர். இத்தகைய ஓர் எண்ணம் உண்மையில் தன்னைத் தானே அழித்துக் கொள்ள விதைக்கப்பட்ட விதை.

BRG
bhaanraja graphics
bhaanrajagraphics@gmail.com / bhaanrajagraphics@rediff.com
SPECIALIST IN
* BookWork Designing
* Wrapper Designing
* Layout Designing
* Logo Designing
* Plamphet Designing
* Magazine Design Etc.,
89394 99598
New no.16, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Che- 024.




ஆசிரியர், வெளியீட்டாளர்
C.நாகராஜன்
♦♦♦
இணை ஆசிரியர்
முருகன்
♦♦♦
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர், சஞ்சனா, ஸ்ரீபதி,
♦♦♦
♦♦♦
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
♦♦♦
நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
7299992699/8939499598

ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்ளுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
8939499598
7299992699 / 9677159070

# இலவச இணைப்பு என்னும் பெயரில் காசு-பணம் பார்க்க கடவுளை அவமதிக்கும் பத்திரிக்கைகள்

சமீபத்தில் எனது நீண்டகால நண்பர் ஒருவரின் திருமண விழாவிற்கு செல்ல முடியாத காரணத்தால், அவரது இல்லத்திற்கு சென்று அவருக்கும், அவரின் மனைவிக்கும் ஒரு சிறு பரிசுபொருள் கொடுத்து, திருமணத்தில் கலந்து கொள்ள முடியாததற்கு வருத்தம் தெரிவிக்க சென்றிருந்தேன்.

திருமண இல்லம் என்பதால், அங்கு அவரின் உறவினர்கள் மற்றும் அவர்களின் குழந்தைகள், சிறு சிறு பிள்ளைகள் என்று அந்த இல்லம் ஒரே குதுகலமாக இருந்தது. சிறிது நேரம் நண்பருடன் பேசிவிட்டு, புதுமணப் பெண்ணிடம் நண்பரின் நல்ல விஷயங்களையும், எங்களது நட்பைப் பற்றியும் பேசிக்கொண்டிருந்த சமயத்தில், அவரது உறவினரின் குழந்தை வயிற்று உபாதை காரணமாக மலம் கழித்துவிட்டது.

உடனே அக்குழந்தையின் தாய் ஓடி வந்து, ஒரு பேப்பரை எடுத்து குழந்தையின் மலத்தை அள்ள முற்பட்டார். அவரின் செயல் அனைத்து வீடுகளிலும் நடைபெறும் சம்பவம்தான், எங்களது இல்லத்திலும் குழந்தை இருப்பதால் அது எனக்கு பழகிவிட்டது. ஆனால், அந்த தாய் மலம் அள்ள ஒரு புத்தகத்திலிருந்து ஒரு பேப்பரை கிழித்தெடுத்தார்கள் அதைப் பார்த்ததும் எனது மனம் சற்று வருத்தமடைந்தது.

நன்றாக பேசிய நான், மலம் அள்ள அந்த தாய் பயன்படுத்திய பேப்பரை பார்த்ததும் சற்று வருத்தமடைவதை கவனித்த நண்பரின் மனைவி உடனடியாக அந்த புத்தகத்தை எடுத்து "சாரிங்க அண்ணா" என்று கூறியவாறு அருகில் அடுக்கி வைத் திருந்த ஒரு சில புத்தகங்களுடன் அதை வைத்தார்கள்.

அவர் அடுக்கி வைத்திருந்த புத்தகங்கள் அனைத்தும் இந்து மத சம்பந்தமாக நாளிதழ்களில் இலவச இணைப்பாக வந்த ஆன்மீகம் சம்பந்தப்பட்ட புத்தகங்கள்.

மேலும், நண்பரின் மனைவி பேச்சை தொடர்ந்தார். "நாங்கள் குறிப்பிட்ட இரண்டு நாளிதழ்களை வாங்கும் பழக்கம் உள்ளது. அந்த நாளிதழ்களில் வெள்ளி சனி போன்ற நாட்களில் இலவச இணைப்பாக ஆன்மிக புத்தகத்தை தருகிறார்கள். இணைப்பு வேண்டாம் என்று பேப்பர் போடும் நபரிடம் கூறினாலும் சில சமயங்களில் மறதியில் அவர் போட்டுவிடுகிறார்" என்று அப்பாவியாக கூறினார்.

அவர் கூறியதில் தவறேதும் இல்லை என்பதை என்னால் உணர முடிந்தது, ஒருசில நாளிதழ்களில் வேண்டாத திணிப்பாக நாளிதழ்களை வாங்கும்போது இலவச இணைப்பாக அவர்கள் சாராத மத புத்தகத்தை வழங்கும்போது, வாங்குபவர்களால் என்ன செய்ய முடியும்.

இந்து மத புத்தகத்தை இலவச இணைப்பாக தரும் நாளிதழ்கள் வெறும் காசுக்காக மற்ற மதத்தினரிடம் அவர் சம்பந்தப்படாத மத புத்தகத்தை திணிப்பது வெட்கடோன விஷயம்தான். அப்படியே விற்க வேண்டுமென்றாலும், புத்தக இணைப்பிற்கு தனியாக ஒரு சில பைசாவை நிர்ணயித்து பேப்பரின் விலையை குறைத்தால், தேவைப்படுபவர்கள் மட்டும் வாங்குவார்கள்.

இதையெல்லாம் யோசிக்காமல் விற்பனைக்கும், காசு பார்க்கவும் இந்து மதத்தையே கேலி செய்யும் இவர்களின் நாளிதழ்கள் அந்த தாய் அள்ளிய மலத்தை விட கேவலமானதாகத்தான் தோன்றுகிறது.

**மதத்தின் பெயரை பயன்படுத்தி, கடவுளை இழிவுபடுத்தி சம்பாதிக்கும் பணம் கடைசிவரை இவர்களுடன் வரப்போவதில்லை என்பதை தெரிந்துகொள்ளுங்கள்**

ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!

ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!

விளம்பர விபரம்
அரை பக்க விளம்பரம்
ரூ.2500
முழு பக்க விளம்பரம்
ரூ.5000
பேக்கேஜ் விளம்பரங்களும் ஏற்றுக் கொள்ளப்படும்
விளம்பர ஏஜென்சிகளும் வரவேற்கப்படுகிறார்கள்

கோவில்களில் நடைபெறும், நடைபெற்ற, நிகழ்ச்சிகளை இலவசமாக பிரசுரிக்கிறோம். நிகழ்ச்சி பற்றி முழு தகவலையும் கோவிலின் புகைப்படத்தையும் அனுப்பிவைக்கவும்

விளம்பர தொடர்புக்கு:
8939499598 / 9677159070
aanmeegamalar@gmail.com

உங்களைத்தான் தேடுகிறோம்...

ஆன்மீகமலர்.காம்
இணையதளத்தின் மூலம் வெளிவரும் ஆன்மீகமலர்.காம் மெயில் புத்தகத்தில் நீங்களும் துணை ஆசிரியராக வாய்ப்பளிக்கிறோம்...
உங்கள் ஊரில் உள்ள கோயில், மடம், சித்தர்கள், ஆன்மீக சேவை புரியும் அன்பர்கள், உழவாரப்பணி செய்யும் அன்பர்கள், கோயிலின் சிறப்புகள் போன்றவற்றை தொகுத்து வழங்க விருப்பமிருந்தால் எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
எங்களுடன் நீங்களும் இணைந்து ஆன்மீக சேவை புரியலாம்...

தொடர்பு கொள்ளவும்:
7299992699 / 8939499598
aanmeegamalar@gmail.com



# சனி பெயர்ச்சி

## மனித வாழ்க்கையில் பல அனுபவங்களை உணர வைக்க பெயர்ச்சியாகும் சனிபகவான்

சனி பெயர்ச்சி என்றாலே மக்கள் மனதில் ஒருவித பயம் ஏற்படுவது தொடர்கதையாக மாறிவருகிறது. உண்மையில் சனிபெயர்ச்சி என்பது ஒவ்வொரு மனிதரின் வாழ்க்கையிலும் ஒருவித படிப்பினையை தந்து அதனால் விளையும் அனுபவங்களுக்கேற்ப மனிதர்களை பக்குவப்படுத்துவதுதான் சனிபகவானின் பணி என்பதை மக்கள் உணர மறுக்கின்றனர்.

நவகிரகங்களில் சனி கிரகம் பலமான சக்திபெற்ற கிரகம் மட்டுமல்ல, ஒரு ராசியில் அதிக காலம் இரண்டரை வருடம் தங்கிப் பலன் செய்யும் கிரகமுமாகும். அதனால் அவருக்கு மந்தன் என்றும் முடவன் என்றும் பல பெயர்கள் உண்டு.ஒரு ராசியில் இரண்டரை வருடம் என்ற விகிதத்தில் 12 ராசிளையும் (ராசி மண்டலத்தை) ஒருமுறை சுற்றி வருவதற்கு 30 வருடங்கள் ஆகும். அந்த முப்பது ஆண்டுகளில் பொதுவாக மனித வாழ்க்கையிலும்,நாட்டிலும், தொழில்துறை என எல்லாவற்றிலும் ஏதாவது ஒரு மாற்றம் ஏற்படுவது இயல்பு. அதனால்தான் முப்பது வருடத்துக்குமேல் சேர்ந்தாற்போல் யோகத்திலே திளைத்தவர்களும்இல்லை; கஷ்டத்திலேயே இளைத்தவர்களும் இல்லை என்பார்கள்.

சனீஸ்வரனைப்போல் கொடுப்பவரும் இல்லை கெடுப்பவரும் இல்லை என்பதும் சோதிடப் பழமொழி. ஏழரைச்சனி, அஷ்டமச்சனி, கண்டச்சனி, அர்த்தாஷ்டகச்சனி என்பன சனீஸ்வரனின் சஞ் சாரத்தினால் (கோசரநிலை) ஏற்படுவனவாகும்.

சனி மகா தெசை பிறப்பில் இருந்து கணிக்கப்பெறுவதாகும்.அவரவர் ராசிசக்கரத்தில் (சந்திரன் நிற்கும் இடம் ”ராசி” எனப்படும். அதற்கு) 12ஆம் இடத்தில் சனி வரும்போது ஏழரைச் சனியின் முதல் கட்டம் ஆரம்பமாகின்றது. அங்கு இரண்டரை வருடம் சஞ்சரிக்கும் சனியை “விரயச் சனி” எனவும். அடுத்து ஜென்ம ராசியில் இரண்டரை வருடம் 2ஆம் கட்டமாக சஞ்சரிக்கும் சனியை “ஜென்மச் சனி” என அழைப்பர். அதன் பின் ஜென்ம ராசிக்கு 2ஆமிடத்தில் சனி சஞ் சரிக்கும் இரண்டரை வருட மூன்றாம் கட்டச் சனியை “பாதச் சனி” என்றும் குடும்பச் சனி, வாக்குச் சனி எனவும் அழைப்பர்.

இப்படி மூன்று கட்டமாக வரும் சனியின் மொத்த காலம்தான் ஏழரைச் சனியின் காலம் எனப்படும். ஒருவருடை வாழ்நாளில் சிறு வயதில் வரும் முதல் சுற்றை (7.5 ஆண்டு) “மங்கு சனி” என்றும், வாலிப மற்றும் மத்திம வயதின்போது வரும் இரண்டாம் சுற்றை (7.5 ஆண்டு) “பொங்கு சனி” என்றும், கொஞ்சம் வயதான காலத்தில் வரும் மூன்றாம் சுற்றை (7.5 ஆண்டு) “மாரகச் சனி” அல்லது “மரணச் சனி” என்றும் அழைப்பர்.

இவற்றை விட அவரவர் ராசியில் இருந்து எட்டாவது இராசியில் சனீஸ்வரன் கோசரமாக சஞ்சரிக்கும் இரண்டரை வருட காலம் “அட்ட மத்து சனி” என்றும்; ஏழாம் இடத்தில் சஞ் சரிக்கும் இரண்டரை வருட காலத்தை “கண்டச்சனி” என்றும்; நாலாம் ராசியில் சனீ ஸ்வரன் சஞ்சரிக்கும் இரண்டரை வருட காலம் அர்த்தாஷ்டகச்சனி (அரை அட்டமச் சனி) என்றும் அழைக்கப்பெறும்.இக் காலங்களும் சோதனை, வேதனை மிக்கதாகவே அமையும்பிறந்ததிலிருந்து முப்பது வயதுக்குள் ஏற்படும்.

### ஏழரைச்சனியினால் ஏற்படும் தாக்கம்:

“படிப்பில் கவனம் செலுத்தவில்லை, காதல், கவன சிதறல், உறவினர்கள் மரணம், வேலையில்லா திண்டாட்டம்” என்பதுபோல பலவிதத்தில் பாதிப்புகள் இருக்கும். குழந்தைப் பருவம் முதல் டீன் ஏஜ்வரையிலான இந்த சுற்றில் பெற்றோருக்குள் கருத்து மோதல், பிரிவு, சந்தேகத்தால் சண்டை என்று பிரச்னைகள் வந்து நீங்கும். பன்னிரெண்டு வயதிற்கு மேல் சனிப்பிடித்தால்குழந்தையின் கவனம் சிதறும். சரியான கவனத்தைப் படிப்பில் செலுத்தாது. Drop out from School கேசாகிவிடும். பத்து, ப்ளஸ் டூ வகுப்பில் பெயிலாகும் குழந்தைகளில் பெரும்பாலோனருக்கு ஏழரைச் சனி நடந்து கொண்டிருக்கும்.. சிலருக்கு படிப்பு, மற்றும் வித்தைக் குரிய கிரகமான புதன் ஜாதகத்தில் பலவீனமாக இருந்து அதனால்அவர்கள் தோல்வியுற நேரலாம். அவை விதிவிலக்கு.கணவன் மனைவிக்குள் நேரடி யாக எந்தப் பிரச்னையும் இருக்காது. மூன்றாவது நபர் தலையீட்டால்தான் பிரச்னை உருவாகும். குடும்பத்திற்கு வழக்கமில்லாத உணவு வகைகளை குழந்தைகள் எடுத்துக் கொள்வார்கள். மந்தம், மறதி, தூக்கம் என்று இருப்பார்கள்.

ஏழரை சனியில் பெறும் அனுபவங்களும், அவ மானங்களும், காயங்களும், வடுக்களும் வாழ்க்கை முழுதும் மறக்காதபடி இருக்கும். ‘‘இரண்டு மார்க் அதிகமாக எடுத்திருந்தால்தலையெழுத்தே மாறியிருக்கும். இன்னும் கொஞ்சம் பொறுப்பா படிச்சுருக்கலாமே’’ என்று ரிசல்ட் வந்தபிறகு புலம்ப வைப்பார். இப்படி வருத்தப்பட வைத்தே வாழ்க்கையை வளர்ப்பார், சனி தர்மதேவன். அதர்மத்தில் திருப்பி விட்டு சோதிப்பார். வலை யில் மாட்டாது வெளியேற வேண்டும்.

2வது சுற்று சனியை பொங்கு சனி என்று சொல்வார்கள். அவருடைய வேலையே இது தான். அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வது தான் இவர் வேலை. திருமணம், குழந்தை பாக்கியம், வீடு, மனை, வாகன வசதிகள் என எல்லாவற்றையும் 2வது சனியாக பொங்கு சனி கொடுப்பார். அதனால் தைரியமாக வாங்கலாம். முப்பது வயதுக்கு மேல் யாருக்கு ஏழரைச் சனி நடந்தாலும் அதற்கு பொங்கு சனி என்று பெயர். பறித்தல், பாதுகாத்தல், பலமடங்காக பெருக்கித் தருதல். இதுதான் இரண்டாவது சுற்றின் கான்செப்ட். உள்ளுக்குள் கிடந்த திறமைகளை பூவானம் போல பொங்க வைக்கும். செல்வத்தை அள்ளிக் கொடுக்கும். ஆனால், கொஞ்சம் கெடுக்கும். அதனால், கொடுத்துக் கெடுப்பவர்; கெடுத்து கொடுக்கிறவர் என்ற பெயர் சனிக்கு உண்டு.இந்த இரண்டாவது சுற்றின்போது சிலர், மிதமிஞ்சிய செல்வ வளத்தால் பிரச்னைகளை உருவாக்குவார்கள்.‘‘நான் யார் தெரியுமா?’’ என்று செல்வாக்கை நிரூபிக்கத் துணிவார்கள். தான்தான் பெரிய ஆள் என்று தன்னடக்கமற்ற மனோநிலையில் திரிவார்கள். அப்படி மாறிய அடுத்த நிமிடமே, ஆட்டம் காண வைக்கும் முயற்சியில் இறங்குவார் சனி. பழைய நிலைக்கே கொண்டு செல்லத் திட்டமிடுவார். ஆகவே, கவனமாக இருங்கள். பேச்சிலோ, செயலிலோ கர்வக் கொம்பு முளைத்தால் கொடுத்ததைப் பிடுங்க தயங்க மாட்டார். சனி பகவான் வந்தால் தான் நம் அறிவுக்கும், சக்திக்கும் அப்பாற்பட்ட பல விஷயங்கள் இருக்கின்றன என்பதை உணர்வோம்.

வசதி வரும்போது எதையும் தலையில் ஏற்றிக் கொள்ளாமல் கூழ் கிடைத்தாலும்குடியுங்கள். இந்த இரண்டாவது சுற்றில்தான் வியாபாரம் விருத்தியாகும். அதனால் தைரியமாக தொழில் தொடங்கலாம். ‘‘ரெண்டாவது ரவுண்டுல ரெட்டிப்பு வருமானம்’’ என்றொரு வாக்கியம் உள்ளது. ஆனால் பாதை மாறினால், அதலபாதாளம்தான். அதேசமயம் நம்பிக்கை துரோகம் செய்தவர்களை பார்த்து துடிக்காதீர்கள். டென்ஷன் ஆகாதீர்கள். ஆரோக்கியம் பாதிக்கும். ஏழரை சனியில் யார் உங்கள் காசைசாப்பிட்டாலும், அது ஏற்கனவே நீங் கள் பட்ட கடன் என்று நினைத்துக் கொள்ளுங்கள். சனிதிசை நடக்கும்போது கண்டிப்பாக திருநள்ளாறு தலத்திலும், திரு வாரூர் திருத்துறைப்பூண்டி பாதையிலுள்ள திருக்கொள்ளிக்காடு தலத்திலும் வீற்றிருக்கும் சனிபகவானை தரிசித்து வந்தால் பல பிரச்சனைகளுக்கு தீர்வு கிடைக்கும்.

சனிக்கிழமைகளில் ஆஞ்சநேயருக்கு நெய் தீபம் ஏற்றி தொல்லைகளில் இருந்து விடுவிக்கும் படிமனமுருகவேண்டி வழிபடலாம்.

## சங்க காலத்தில் கொண்டாடப்பட்ட

# பொங்கல்

பொங்கல் என்பது தென்னிந்திய மக்களின் பழமை வாய்ந்த பண்டிகையாகும்; குறிப்பாக தமிழர்களின் பண்டிகையாகும். இந்த பண்டிகையின் வரலாற்றைப் பார்க்க வேண்டுமானால் நாம் சங்க காலமான கி.மு. 200 கி.மு. 300 நோக்கி செல்ல வேண்டும். பொங்கல் என்பது சமஸ்கிருத புராணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதை போல் திராவிட அறுவடை பண்டிகையாக அறியப்பட்டாலும் கூட, வரலாற்று அறிஞர்கள் இந்த பண்டிகையை சங்க காலத்தின் போது கொண்டாடப்பட்ட தை நீராடல் என நம்புகின்றனர்.

தை நீராடல்: சங்க காலத்தின் போது நடந்த கொண்டாட்டங்கள் தான் இன்றைய பொங்கல் கொண்டாட்டமாக மாறியுள்ளது. கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, தை நீராடலின் போது சங்க கால பெண்கள் ‘பாவை நோன்பு’ என்ற விரதத்தை கடைப்பிடித்து வந்தனர். பல்லவர்களின் ஆட்சி காலத்தில் (கி.பி. 400கி.பி.800) இது மிகவும் முக்கியமான பண்டிகையாக விளங்கியது. தமிழ் மாதமான மார்கழியின் போது இது கொண்டாடப்பட்டது. இந்த பண்டிகையின் போது நாட்டில் மழையும் வளமும் செழிக்க வேண்டி இளம் பெண்கள் வேண்டுவார்கள்.

இந்த மாதம் முழுவதும் பால் மற்றும் பால் பொருட்களை தவிர்ப்பார்கள். தங்கள் முடிக்கு எண்ணெயிட்டு கொள்ள மாட்டார்கள். மேலும் பேசும் போது கடுமையான சொல்லை பயன்படுத்த மாட்டார்கள்.

பெண்கள் அனைவரும் விடியற்காலையில் குளித்து விடுவார்கள். ஈர மண்ணில் செய்யப்பட்ட கட்யாயணி என்ற பெண் தெய்வத்தின் சிலையை அவர்கள் வணங்கி வந்தார்கள். தை மாதத்தின் முதல் நாள் தங்கள் நோன்பை முடித்துக் கொள்வார்கள். நெற்பயிர்கள் செழிப்பதற்காக அளவுக்கு அதிகமான மழையை கொண்டு வருவதற்காகவே இந்த நோன்பு. பழமை வாய்ந்த இந்த மரபுகளும், சடங்குகளும் தான் பொங்கல் கொண்டாட்டங்களுக்கு பிள்ளையார் சுழி போட்டது.

திருப்பாவை மற்றும் திருவெம்பாவை தை நீராடல் பண்டிகை பற்றியும், பாவை நோன் பின் போது கடைப்பிடிக்கப்படும் சடங்குகள் பற்றியும், ஆண்டாளின் திருப்பாவை மற்றும் மாணிக்க வாசகரின் திருவெம்பாவை ஆகியவற்றில் தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. குலோத்துங்க சோழ அரசன் கோவில்களுக்கு நிலத்தை பரிசாக அளிப்பார். அதிலும் குறிப்பாக பொங்கல் பண்டிகையின் போது என திருவள்ளூர் வீரராகவா கோவிலில் உள்ள கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சைவ, வைணவத்தில் பொங்கல் பற்றி இரண்டு வரலாற்று கதைகள் உள்ளது. ஒன்று சிவபெருமானுடன் தொடர்புடையது, மற்றொன்று இந்திர தேவனுடன் தொடர்புடையது.

சிவபெருமான் மற்றும் நந்தி புராணத்தின் படி, ஒரு முறை நந்தியிடம் பூமிக்கு செல்லுமாறும், அங்கே மனிதர்களிடம் தினமும் எண்ணெய் தேய்த்து குளித்து, மாதம் ஒரு முறை மட்டுமே உணவு உண்ணுமாறு கூற சொன்னார் சிவபெருமான்.

ஆனால் நந்தியோ, தவறுதலாக, தினமும் உண்ணவும் மாத மொருமுறை எண்ணெய் தேய்த்து குளிக்கவும் அனைவரிடமும் கூறி விட்டார். இதனால் கோபம் கொண்ட சிவபெருமான், மனிதர்களுடன் நிலையாக பூமியில் வாழுமாறு நந்திக்கு சாபமிட்டார். அதிகமான உணவை தயாரிக்க மனிதர்களுக்கு உதவியாக நிலத்தை உழ வேண்டும் என கூறினார்.

இதன் காரணமாகத்தான் பொங்கலுக்கு அடுத்த நாள் மனிதர்களுக்கு உதவும் நந்தி தேவருக்கு சமமான மாட்டினத்தை சிறப்பிக்கும் வகையில் மாட்டுப் பொங்கல் கொண்டாடப்படுகிறது.

மற்றுமொரு புராணக் கதையின் படி, கடவுள்களுக்கு எல்லாம் அரசனானதால் மிகவும் கர்வத்துடன் இருந்து வந்த இந்திர தேவனுக்கு பாடம் புகுத்த எண்ணினார் குழந்தை பருவத்தில் இருந்த கிருஷ்ணர். ஆடு மேய்ப்பவர்கள் அனைவரும் இனி இந்திர தேவனை வணங்க வேண்டாம் என கூறினார். இதனால் கோபம் கொண்ட இந்திர தேவன், புயல் மழையை உண்டாக்க மேகங்களை பூமிக்கு அனுப்பினார்.

மழையும் 3 நாட்களுக்கு தொடர்ந்தது. கிருஷ்ணரோ

> மனிதர்களுடன் நிலையாக பூமியில் வாழுமாறும் அதிகமான உணவை தயாரிக்க மனிதர்களுக்கு உதவியாக நிலத்தை உழ வேண்டும் என நந்திக்கு சாபமிட்டார் சிவபெருமான்.







மனிதன் இனத்தை பாதுகாக்க கோவர்த்தன மலையை கையில் தூக்கி சுமந்து கொண்டார். பின் தன் தவறையும், கிருஷ்ணரின் தெய்வீக சக்தியையும் உணர்ந்தார் இந்திர பகவான். கிருஷ்ணரிடம் மன்னிப்பு கேட்டு மக்களின் வாழ்விற்கு தேவையான நெற்பயிர் போன்றவற்றை மீண்டும் புத்துயிர் பெற்று செழிப்படைய உதவினார் இந்திரன். இதனால் இந்த தினத்தில் அறுவடை காலமாக மாறியது. இதனால் விவசாயம் செய்பவர்கள் இந்த நாளை பொங்கல் பண்டிகையாக கொண்டாட ஆரம்பித்தனர்.

பொங்கல் தினத்தன்று நெற்கதிர்களை அறுப்பதற்கு முன்பு கடவுளுக்கு விசேஷ பூஜை நடத்தப்படும். தங்களின் ஏர் கலப்பை மற்றும் நெல் அறுக்கும் அரிவாள்கள், சந்தன குப்பி ஆகியவற்றை வைத்து சூரியனையும், பூமியையும் விவசாயிகள் வணங்கிடுவார்கள். கடவுள் முன் வணங்கப்பட்ட கருவிகளை கொண்டு தான் நெற்கதிர்களை அறுவடை செய்வார்கள். நான்கு நாள் பண்டிகை ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பண்டிகை கொண்டாடப்படுகிறது. முதல் நாளான போகிப்பொங்கல், குடும்பத்திற்கானது. இரண்டாம் நாளான சூரியப் பொங்கல் சூரிய பகவானை வழிபடுவதற்கான நாளாகும். மூன்றாம் நாளான மாட்டுப் பொங்கல், மாடுகளை வழிபடுவதற்கான நாளாகும். இந்த நாளில் மாடுகளை குளிப்பாட்டி, கொம்புகளுக்கு அடர்த்தியான வர்ணம் பூசி அதன் கழுத்தை சுற்றி மாலையிடப்படும். கடவுளுக்கு படைத்த பின், அந்த பொங்கல் கால்நடை விலங்குகளுக்கும், பறவைகளுக்கும் உண்ணுவதற்கு வழங்கப்படும். நான்காம் நாளான பொங்கல் காணும் பொங்கல், குடும்ப உறுப்பினர்களும், குடும்பத்துக்கு உறுதுணையாக விளங்கும் விலங்குகளையும் மகிழ்ச்சியுடன் அரவணைத்து செல்வதற்குமான நாளாகும்.

# பிரதோஷ அரிசி

தோஷம் என்றால் தடை என்று பொருள். இத்தகைய தடைகளுக்கே பாபம் என்று பெயர். மனிதனின் தடைகளுக்கெல்லாம் மனிதனின் பாபமே காரணம்.

தண்ணீரினால் வருகின்ற தோஷத்திற்கு ஜலதோஷம் என்று பெயர். ஜலதோஷம் பிடித்த காலத்தில் மூக்கினால் மூச்சு விட முடியாது. இத்தடையை நீங்க மருந்து உண்ண வேண்டும். மனிதன் மூச்சு விடு கின்ற மொத்த காலம் மனிதனுக்கு அக்காலம் ஆண்டவன் அருளிய பொற்காலம்.

இதல் ஜலதோஷ காலம் பாப காலம். இது ஒழிய வேண்டும் என்பதே மனிதனின் நோக்கம். இதே போன்று பிரதோஷம் என்றால் பாபமான காலம் என்று பொருள்.

இப்படியே மஹா பிரதோஷம் என்றால் பஞ்ச மஹா பாபங்களை நிகழ்த்திய காலம் என்று பொருள். கொலை செய்தல், களவு செய்தல், பொய் சொல்லுதல், கற்பழித்தல், மது உண்ணுதல் இவைகளே ஐந்து பெரிய பாபங்கள்.

பிரதோஷம் என்றால் மனித சமுதாயம் செய்கின்ற பாவங்கள் என்றும், மஹாப்பிரதோஷம் என்றால் மனிதன் செய்கின்ற பெரிய பாபங்கள் என்றும் பெயர்.

இவைகளை மனிதன் எப்பொழுது எல்லாம் நிகழ்த்துகினறானோ அந்த நேரங்க ளுக்கெல்லாம் பாபமான காலம் என்று பெயர். காலமே மனிதனின் சிந்தனையைக் குறுக்கிடுகிறது.

முன்னேற்றத்தைக் குடுக்கிடாத காலத் திற்கே புண்ணியகாலம் என்று பெயர். அந்த நேரங்களில்தான் மனிதன் சிந்திப்பான் முன்னேறுவான். கடவுளை நினைப்பான். குறுக்கீடும் காலங்களை விலக்கிக் கொள்ளுங்கள். முன்னேற்றம் ஏற்படும்.

பிரதோஷகால பூஜையும், தரிசனமும் இதற்காகவே நிகழ்த்தப்படுகின்றன. பருவ காலம், மழைகாலம், வெயில்காலம் இதைப் போன்று நல்ல நினைவு என்ற புண்ணியமும், கெட்ட நினைவு என்ற பாபமும் மனிதனின் காலத்தையே குறுக்கிட்டு அவனை தீயவனாக ஆக்கிவிடுகிறது. இதை அறிந்து கொண்டான் சிவபெருமான். மனிதன்தான் செய்த தீமைகளை ஒப்புக்கொள்ள மாட்டான் திருந்த மாட்டான், இதுவும் ஆண்டவனுக்குத் தெரியும்.

மனிதனைத் தீயவனாக உலவ விடுவதில் என்ன லாபம்? அதனால் அனைவரையும், பிரதோஷ பூஜையை ஒப்புக் கொள்ளும்படியாகச் செய்து அக்காலத்தில் எவர் வந்து தன்னைப் பூஜித்து தரிசித்தாலும், புண்ணியம் என்றால் பாவம் தானாக மறையும், உடனே நல்லவை நடக்கும் முன்னேற்றம் என்றார் சிவன்.



அதற்காகப் பதினைந்து நாட் களுக்கு ஒருமுறை மாலை 4.30 மணியிலிருந்து 6 மணிவரை ஒரு காலத்தைப் பாப காலமாக அறிவித்தான். அக்காலத்தில் கூத்தாடி மகிழ்ந்தான். அப்பிரதோஷ காலம் தனக்கே உரியது என்றார் சிவன்.

இந்த மாலை வேளையில் வலிமையுள்ள நந்தியே இப் பூஜையைச் செய்கிறார். பாவ மில்லாதவரே ஆவார்.

உலகில் நந்தியின் வடி வம் காளைமாடு, பசுமாடு இவை மிகப் பெரிய சாதுக்களே, பாபிகளல்ல, புண் ணிய ஜீவன்களான இவை பிரதோஷத்தில் ஆண்டவனை பூஜிக் கின்றன. அதனால் அப்பொழுது இறைவன் அவைகளுக்கு நிறைய அருகம்புற்களை மேய்வதற்குத் தருகிறார்.

இதைக் கண்டு பக்தர்களும் அந்த பூஜையில் நந்தியின் முன்னும் இறைவனின் முன்னும் அருகம்புல்லைப் போட்டு வழிபடுதல் வேண்டும் செய்தால் மனிதனின் பாபம் தொலையும். ஆண்டவனும் மனிதனை சமுதாயத்தில் மேய அருளுவான்.

பிரதோஷ தரிசனம் செய்பவர்கள் பசு, காளை இவைகளுக்குப் புற்களை வழங்கி வழிபட்டால் புண்ணியம் வந்து சேரும், பாபம் தொலையும்.

பிரதோஷ நேரத்தில் நந்தி சிவபெருமானுக்கு ஒரு அன்புக் காணிக்கையைக் கொடுத்தார். அது நெய் கலந்த ஒரு பிடி பச்சை அரிசியே இதை சிவபெருமானும் உண்டார். நந்தியும் உண்டார். ஊர்ப் பாபத்தை மனிதனின் பாபத்தை ஏற்று அவர்களின் பாபம் இவ் அரிசியை உண்டதனால் தொலைந்தது. வாய் நாற்றமெடுப்பது சமைத்த உணவினால்தான், வாய் நாறும் போது பச்சரிசி யைப் போட்டு மென்றால்வாய் நாற்றம் உடனே ஒழியும். இதைப் போன்று பிரதோஷ தரிசனம் செய்து பிரதோஷ அரிசியை உண்டால் மனிதனுக்கு நல்வாக்கு பிறக்கும் அறிவு மலரும்.

அனைத்துவித ஜோதிட
பரிகாரங்களுக்கும் தொடர்புகொள்ளவும்
ஸ்ரீ அம்பாள் உபாசகர்
A.R.R. சுதர்சன ஐயங்கார்,
திருச்சி 17
போன் 9840369513

Owned, Published by C.NAGARAJAN. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.
Editor : C.Nagarajan,
E-mail: aanmeegamalar@gmail.com Website: http://www.aanmeegamalar.com Cell: 7299992699

# உழைத்து உண்ணும் தண்ணீரும் சோறும் சிறந்தது

- ❖ அன்பு, அடக்கம், சாந்தம், பொறுமை, ஞானம் இக் குணங்கள் எல்லாம் மேலான சத்வகுணங்கள். இக்குணங்கள் ஒருவரிடத்தில் மேலோங்கினால் மனிதநிலையில் இருந்து தெய்வநிலைக்கு உயர முடியும்.
- ❖ கல்வி பயிலுதல், தானம் செய்தல், உடல் நலம் பேணுதல் மூன்றையும் ஒவ்வொருவரும் பெற முயற்சி செய்தல் அவசியம்.
- ❖ விவேகம் உடையவன் பண்டிதன். மனத்தூய்மை உள்ளவன் சுத்தன். துன்மார்க்கத்தில் மனதை போகவிடாமல் அடக்குகிறவன் வீரன். பெண்களின் அழகில் வஞ்சிக்கப்படாதவன் சமர்த்தன்.
- ❖ யாசித்து நெய்யும் பாலும் தயிரும் சேர்ந்த அன்னத்தை உண்பதைவிட உழைத்து உண்ணும் தண்ணீரும் சோறும் சிறந்ததாகும்.
- ❖ பலபேர் கூடி கையெழுத்திட்ட விண்ணபத்தைக் கண்டு அதிகாரிகள் உடனே நடவடிக்கை எடுப்பர். அதுபோல பலபேர் கூடி முறையிடும் கூட்டு பிரார்த்தனை செய்தால் ஆண்டவன் என்னும் அதிகாரியும் உடனே நடவடிக்கை எடுக்க ஆயத்தமாவார்.
- ❖ பெரியோர்கள் தங்களின் அறிவுரைகளாலும் உபதேசங்களிலும் நமக்கு நல்வழி காட்டுகிறார்கள்.
- ❖ வயலில் என்ன விதைக்கிறோமோ அதுவே விளையும். அதுபோல் மனத்தாலும் வாக்காலும் உடலாலும் பிறருக்கு என்ன செய்கிறோமோ அதுவே திரும்ப கிடைக்கும்.
- ❖ கருணைக் கொண்டு நல்லவர்களுக்கு மட்டுமே உதவிட வேண்டும். தீயவர்களுக்கு கருணைக் காட்டுவது தீங்கில்தான் முடியும். பசுவுக்கு புல் கொடுத்தால் பால் கிடைக்கும். பாம்புக்கு பால் வார்த்தால் நஞ்சுதான் கிடைக்கும்.
- ❖ எங்கும் நிறைந்த இறைவனை எளிமையாக பூவினாலும், நீரினாலும் வழிபாடு செய்தாலே போதும். அன்பும் ஒழுக்கமும் மட்டும்தான் ஆண்டவனுக்கு மகிழ்ச்சி தரும் விஷயங்களாகும்.
- ❖ பசுவின் உடல் முழுவதும் பால் இருந்தாலும், மடியின் மூலமாக பால் வெளிப்படுவது போல், எங்கும் இறையருள் நிறைந்திருந்தாலும் கோயிலில் இருக்கும் தெய்வங்கள் வாயிலாக திருவருளைப் பெறுகிறோம்.

